

# செந்தமிழ்


| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு ௨௰௰௧ மார்கழி | பகுதி |
|---|---|---|
| ௪௪ | டிசம்பர் — 1970 | ௨ |


## காப்பிய மகள் மாதவி


செல்வி இரா. சக்திதேவி M. A.

விரிவுரையாளர்,

செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.


மாமலர் நெடுங்கண் மாதவியின் பண்புசால் படைப்பு சிலப்பதிகாரமென்னும் ஓவியத்தில் அழகிய வண்ணக் கலவையாகத் தீட்டப்பட்டுள்ளது. புல்லிலும் பூண்டிலும் எல்லா உயிரினங்களிலும் தாமேயாகிக் கலந்துவிடும் இலக்கிய ஆசிரியர்கள், தம்முடைய ஒவ்வொரு படைப்பையும் உயிரூட்டுவதற்காகத் தம் உள்ளுணர்வால், தாமே அப்படைப்பாகி உணர்வு இழைகளால் செய்யப்பெற்ற நிகழ்ச்சிகளெனும் ஆடைகளைத் தருகின்றனர். தமிழ்த் தாய்க்கு அணி சேர்த்த இளங்கோவடிகள் குலமகளைச் சித்திரித்துக் காட்டிய அதே கருணை நோக்கோடு கலைமகளையும் கண்டு கற்போர் உள்ளத்தில் மாதவியை நிலைக்கச் செய்கிறார். மெல்லியதாய், மிக இனிதாய்க் கலத்தொடு புனர்ந்தமைந்த கண்டத்தால் மாதவி இசைக்கின்ற பாடலை நம் செவிகளுக்குத் தெள்ளிய தேனாக்கித் தருகின்றார். காந்தள் விரலின் அசைவினால் பிறக்கும் யாழொலியின் இனிமையையும் கூட்டித் தந்து

மாதவியை அமரகாவியம் ஆக்குகின்ருர். காவிரியன்னை தன்னேடு கலக்கின்ற மகிழ்ச்சியில் புகார் நகரில் அலைபெறிந்து ஆடுகின்ற கடலைப் போல் மாதவி நடமாடிய காட்சியை இன்றும் தஞ்செஞ்சொற்களால் நம் கண்களுணர வைக்கின்ருர்.

சிலப்பதிகாரத்தின் துணைக் காப்பியத் தலைவி மாதவி. கதைப் போக்கின் மாற்றங்களுக்கு இன்றியமையாத அச்சாணியென விளங்கி, ஆடற்கலையின் அரசியாய், மகளிர்க்கு அணியெனத் திகழும் 'கற்பின் செல்வியாய்த், தாய்மையின் கனிவோடு அழகின் நிறைவாய்க் காப்பியத் தின் இன்ப ஊற்ருய், இறுதியில் அருள் கனியும் துறவியாய்க் கற்போர் நெஞ்சங்களில் தனியிடம்பெற்றுத் திகழ்கின்ருள் மாதவி. காப்பியத் தின் பெருநோக்கங்களுள் ஒன்ருன சமுதாயச் சீர்திருத்தம் எனும் முறையிற், பிறப்பால் பரத்தையர் குல மங்கையென்ருலும், பண்பால் நெஞ்சத்தால் குலப் பிறப்பாட்டியின் சீர்மையுடன் வாழ்ந்த மாதவியை இனிய முறையில் அமைத்துக் காட்டும் ஆசிரியர் பரத்தைக்குல ஒழிப் பிற்கு வழிகோலுகின்ருர். கண்ணகியின் உயர்வைத் தோற்றம்பெறச் செய்துகாட்ட, மாதவியின் பண்பை ஆசிரியர் குறைத்துக் காட்டினு ரில்லை. எந்தக் கோணத்தினின்றும் நோக்கினுலும் உயர்ந்த பெண்மைக் குரிய அத்துணைப் பொலிவுங்கொண்ட பெண்ணுக, மாதவியைக் காட் டிக் கோவலனின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பெண்ணல்லர் இருவ ரிடையிலும் வைத்துக் காப்பியத்தைச் சிறந்த முறையில் நடத்திச் செல் கின்ருர் இளங்கோவடிகள்,

அரங்கேற்று காதையில் மாதவியின் பிறப்பைக் கூறி துணைத் தலைவியை அறிமுகப்படுத்தும் ஆசிரியர், அவள் தோன்றிய மரபினை விளக்குகின்ருர். கலைமரபு தோன்றிய வரலாற்றைக் கூறும்போதே, மாதவி வாழ்வில் தோன்றக்கூடிய இடையூற்றின் காரண வடிவத்தை யும் விளக்கிவிடுகின்ருர் ஆசிரியர். எல்லோருக்கும் பொதுவுடைமை யான கலைவாழ்வில் தன்னலம் குறுக்கிடின், அது காதல் வடிவிலே இருந்தாலும், கலைக்கண் நெஞ்சம் செலுத்தக்கூடிய ஒருமைப்பாடு மறைந்து—கலைகொண்டோரின் வாழ்வு தோல்வியில்தான் முடிய இய லும். இந்திரன் அவையில் நடனமாடிய ஊர்வசி, இந்திரச் சிறுவன் சயந்தன் மேல் மனங்கொண்டு தாளம் தவறுகின்ருள். கூத்துக் கலையை, இசைக்கலையை மறக்கின்ருள். அதன் விளைவாகத் துறக்க நீக்கம் அடைகின்ருள். தலைக்கோல் அரங்கேறியபின் சாப நீக்கம் கொள்கின்ருள். உலகில் ஊர்வசி, மாதவி யெனும் பெயரிற் ருேன்ற, அவள் மரபில் தோன்றியவளே சிலப்பதிகார மகள் மாதவி எனப்பட்டு

வோளாவள். மாதவி தோன்றிய மரபின் தோற்றமே, அவள் கலைவாழ்வின் ஒருமை நெஞ்சங்கொள்ள வேண்டிய நிலைக்கு எச்சரிக்கை செய்வதாக அமைகின்றது.

1. உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புசிறந் தன்று
—தொல்காப்பியம், பொருளதிகாரம் களவியல் 113.

மாதவி 'பிறப்பிற்குன்றுப் பெருந்தோள் மடந்தை' என்றே ஆசிரியர் கூறுகின்றார். இது கலைக் குடும்பத்திற்கு அவரளிக்கும் உயர்வு எனலாம்.

## கலை வாழ்க்கை

ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஏதோ ஒரு குறிக்கோளின் அடிப்படையிற் றோன்றி அதை நோக்கி வளர்ந்து வருவதைக் கண்ணகி வாழ்விலும் கண்டோம். அந்தவளர்ச்சி நிலை ஒரு குறிப்பிட்ட வயது வரைக்கும் பிறப்பின் சூழலைப் பொறுத்து அமைகின்றது. மாதவி தன் ஐந்தாவது வயதிலேயே ஆடல், பாடலெனுங் கலைகளில் ஈடுபட்டவள் ஏழாண்டுகள் இடையறாது கற்றுச் சிறந்து தனது பனிரெண்டாம் ஆண்டில் தலையரங்கம் ஏறுகின்றாள். அவள் கலைமீது கொண்ட பற்றும், ஈடுபாடும் வேறெந்தப் பொருளின்மீதும் கொள்ளவில்லைஎனலாம்.

" ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்றுகுறை படாமல்
ஏழாண் டியற்றியோர் ஈரா றாண்டில் "

அவள் கற்ற ஆடற் கலையின் திறங்கள் அனைத்தையும் ஆசிரியர் காட்டுகின்றார். மாதவியின் அரங்கேற்றத்தைக் காட்டுவதின் மூலம் இளங்கோவடிகள் அக்கால இசைக்கலைகள் யாழ், குழல், தண்ணுமை போன்ற கருவி இசைகள், ஆடற்கலை, மேடை அமைக்கும் திறம் அனைத்தையும் சிறந்த முறையில் உரைத்து விடுகின்றார்.

கலைகள் மேலோங்கி நின்ற கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கலைஞர்கள் நிலைதான் என்னே? ஆடலும் பாடலும் ஒருசார் மகளிரிடை ஒதுங்கி நிற்க, அவர்கள் விலைமாதர்களெனத் தாழ்த்தப்பட்ட அச்சமுதாயம் ஒழிக்கப்படவேண்டிய, எரித்துச் சாம்பராக்கப்படவேண்டிய ஒன்றுதானே? குலமகளிரோ எந்தவிதக் கலையும் தெரிந்துகொண்ட

---

1, Lyjic Love.

தாகக் காட்டப்பெறவில்லை. கலையில் ஈடுபாடு கொண்ட மாதவி பிறப்பால் பரத்தை யென்றாலும் தொழிலால் பரத்தையல்லள். தன்னுடைய ஒப்பனைக் கலையிலும், ஆடல், பாடற் கலையின் செல்வச் செழிப்பிலும், இன்பப் பெருக்கிலும் கலையுணர்வுடன் வாழ்க்கை நடத்துபவள், தன்வாழ்விற் சிக்கல் ஏற்பட்ட பின்னர், பெண்மை யுணர்வு விழித்துக் கொள்ள அவள் செய்யும் சமூகப் புரட்சி மிகப் பெரிது!

"மணிமே கலையை வான்றுயர் உறுக்குங்
கணிகையர் கோலங் காணு தொழிகெனக்
கோதைத் தாமம் குழலோடு களைந்து" (நீர்ப்படைக் காதை)

போதித்தானம் புரிந்தறங் கொள்கின்றாள். 'அரசனும் நகரும் ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்ந்தோர் தம்மின் துன்பம் தாம்நனி எய்தக்' கணிகையர் வாழ்க்கையின் தீராத் துயர் களையக் கலைச்செல்வித் துறவு மேற்கொள்ளும் நிலை அவலமிக்க நிலை! சமுதாயத்தை எதிர்கொண்டு செல்லும் நிலை! அழகிற் சிறந்த ஒரே மகள் மணிமேகலைக்குத் துறவு வாழ்வளித்தாளெனின் அவள் ஆற்றிய சமுதாயச் சீர்திருத்தம் மிகப் பெரியதாகும்.

குலமகள் கலையறிவு கொள்ளாததால் ஏற்படும் அவலநிலை கண்ணகியாலும், கலையிற் சிறந்திருந்தாலும் குலப்பிறப்பாட்டியின் சீரும்சிறப்புடன் வாழ இயலாத இழிநிலை, கற்புடை மாதவியாலும் விளக்கம்பெறச் செய்கின்றார் அடிகள். இருவர் வாழ்வின் வழியே, அக்கால மகளிர் அனைவருடைய வாழ்க்கைச் சிக்கல்களையும் எதிரொலிக்கும் வண்ணம், தமிழகம் செல்வச் செழிப்பில் திளைத்த நிலையில் மாபெரும் சமுதாயப் புரட்சி ஏற்படும் வண்ணம் இளங்கோவடிகள் இப்பெண்மைக் காப்பியத்தை யாத்தனர் எனலாம்,

முதன்முதலாகக் காப்பியத்தில்,

"வலக்கால் முன்மிதித்து ஏறி அரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்திக்

காட்சியளிக்கும் மாதவி ஆடற்கலைச் செல்வியாய்த் தோன்றுகின்றாள். அவளுக்கென அமைக்கப்பெற்ற மேடை அவள் கலைக்கு மன்னன் அளித்த சிறப்பாகும். அரங்கேற்ற நாள் அரசு விழாவாக அணிகொள்கின்றது. அவளுக்கு அளிக்கப்பெறும் தலைக்கோல் ஐம்பெருங்குழு, எண்பேராயத்தினரால் ஊர்வலங்கொண்டு செல்லப்பட்டு, மேடையின் முன் அணிசெய்யப்பெறுகின்றது. இத்தகு சீரிய தலைக்கோல் எய்த மாதவி தலையரங்கேறி, அரசவையில் 'நாட்டிய நன்னூல் நன்குக்

கடைப்பிடித்துக்' காட்டுகின்றாள். விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண் கழஞ்சு ஒருமுறையாகப் பெற்றதும் மாதவியின் கலைபெறுஞ் சிருஞ்சிறப்பும் முடிந்துவிடுகின்றது. அரசனளித்த பச்சை மாலையை அவள் தாயார் ஒரு கூனியின் கைக் கொடுத்து,

'நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த'

'மாலை வாங்குநர் சாலும் நங்கொடிக்கென' விலைபேசும் நிலை கண்டும், அக்காலக் கலைச் செல்வியின் அகவாழ்வின் இழிநிலை கண்டும் குருதிக் கண்ணீர் வடிக்க வேண்டியுளது. மாலை வாங்கும் கோவலன் 'மாமலர் நெடுங்கண் மாதவி'யின் மணமனைப்புக்கு அவளுடன்

"அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதலறியா விருப்பின னாயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென்"

என அமைக்கின்றார் ஆசிரியர். காப்பியத்தை அணிசெய்யும் மாமலர் நெடுங்கண்ணாள் மாதவியின் இளமை தரும் இன்ப விருந்து, கலைநெஞ் சம் படைத்த கோவலனுக்குக் குலமகள் கண்ணகியையும் மறந்து விடச் செய்கின்றது. கலை தந்த வாழ்க்கை கடலாடு காதையில் மாதவிஆட, கானல்வரிப் பாடலின் போது ஏற்பட்ட ஊடலால் அக் கலையாலேயே இழந்துவிட நேர்கின்றது.

## காதல் வாழ்க்கை

இளமை வளர்ந்து கொழிக்கத் தன் கலையில் ஈடுபாடுகொண்டு வந்த கோவலனுடன் மாதவி நடத்தும் வாழ்க்கை, காவியக் காதலெனும் ஏட்டின், சுவைமிக்க பக்கமாக அமைகின்றது. கோவல னுக்கு அறிதோறும் அறியாமையூட்டி இன்பக் களிப்பில் ஆழ்த்திய வாழ்க்கையை அந்திமாலைச் சிறப்புசெய் காதையிலும் கடலாடுகாதையி லும் ஆசிரியர் விளக்கி விடுகின்றார். கதைக்குச் சுவையூட்டும் இந்தக் காவியக் காதல் சிலருக்கே கைகூடுவது ஆதலின் வள்ளுவர் அதன் அருமை நோக்கி,

*மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

என்று கூறினர், காதல்துறையில் கரைகண்ட பால்சக் என்ற பிரெஞ்சு ஆசிரியர் 'காதல் மெல்லிய மலர் போன்றது; தொட்டாலும் நொறுங்கி

* திருக்குறள் 1289. காமத்துப்பால்,

விடும்' என்று கூறியுள்ளார். காதல் இனிய யாழ் போன்றது. அதனை மீட்டத் தெரிந்தவர்களுக்குந் தான் ஒவ்வொரு நரம்பும் வேண்டிய இனிய இசையைத் தரும். வேனிற் காதையில் கோவலனின் காதலை இழந்த மாதவியின் கைவிரல் இன்பந்தந்த யாழின் பகை நரம்பில் பட்டுத் துன்பத்தைத் தந்தது. மல்லரிடம் மலைத்தறியா மன்னர்கள் மலரினும் மெல்லியவளிடம் மலைத்தனர். அண்டோனியாவும், கிளியோ பாத்ராவும் என்னும் நாடகத்தில் ஆசிரியவர் வெகு அழகாகக் கிளியோ பாத்ராவை வர்ணித்துள்ளார், 'வயது அவளை வாடவைக்காது; பழக்கம் அவளது மாறும் புதுமையைப் புளிக்க வைக்காது; பிறபெண்கள் இனிமை குறையலாம்; ஆயின் எப்போது அவளிடத்தில் இன்பத்தின் எல்லையை எய்திஞேமென்று உணர்வானே, அக்கணமே அதன் குறைவை மாற்றி, ஆசையைக்கிளறுவாள்' என்று அழகாகக் கூறியுள்ளார்.

1. "Age cannot wither her; not custom stale
   Her infinite variety; other women cloy
   The appetites they feed, but she makes hungry
   Where most she satisfies; for vilest things
   Become themselves in her".

தமிழிலக்கியத்தில் காவியக் காதலியாகக் கருதத் தக்கவள் மாதவியே. அவள் கோவலனுக்கேற்ற காவியமாகத் திகழ்ந்தாள். கோவலன் அழகுணர்ச்சி நிரம்பியவன். மாறி மாறிக் கோலங்காட்டிய மாதவி இனித்தாள். 'யாவதும் மாற்று உள்ள வாழ்க்கையளாகிய' கண்ணகியை இதனுற்றான் சில காலம் மறந்திருந்தான் போலும். அருங்கலைகள் மாதவிபால் கண்டான் கோவலன். யாழ்ச் செல்வம் அவளிடமிருந்தது. ஆடல், பாடலில் ஈடுபாடுடைய கோவலன், மாதவியின்பால் 'விடுதலறியா விருப்பினன்' ஆகியதில் வியப்பொன்றுமில்லை. காதற் காவியத்தைக் கரைத்துக் குடித்த மாதவி, ஊடலும், கூடலும், துனியும், புலவியும் கோவலனுக்குக் காட்டத் தெரிந்தவள்.

'கிளியோபாத்ராவின் மூக்கின்நீளம் அரை விரற்கிடை குறைந்திருந்தாலும் இந்த உலக வரலாறே மாறியிருக்கும்' என்று செகப்பிரியர் உரைப்பதை நோக்க வேண்டும். அந்திமாலைச் சிறப்பு செய்ய,

"நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் காதலற் களித்தாங்கு

---

1. Shakespeare - 'Antony and Cleopatra'

ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி''

என்று இளங்கோவடிகள் மாதவியின் காதல் திறமையைக் காட்டுகின்றார்.

மாதவியின் இன்பக் காதலில் மூழ்கினாலும், பரத்தையர் சேரியில் வாழும் கோவலன், செல்வம் தந்த செழிப்பாற் பல இடங்களுக்கும் இன்பந் தேடிச் சென்ற புறத்தொழுக்கத்தை உணர்த்த, அவனைத் தென்றலுடன் ஒப்புவமை கூறுகின்றார் ஆசிரியர். பல மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் தென்றல் போல,

''நகையா டாயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன்'' (இந்திர விழவூரெடுத்த காதை)

என்று ஆசிரியர் அமைத்துக் காட்டுகின்றார். கண்ணகியுடன் வாழ்ந்த காலத்து, அவள் ஊடலே கொள்ளாதவாறு, புறத்தொழுக்கம் எதிலும் ஈடுபடாத கோவலனுக்கு, மாதவி வாழ்ந்த சூழல் அவனைத் திரிதரு மரபினனாக ஆக்கியதைக் காட்டுகின்றார் ஆசிரியர். இதனால்தான் மாதவி, அவனை ஒருநிலையில் நிறுத்தத் தன் கலையழகெல்லாங்கொண்டு மாறி மாறிக் கோலங்கொண்டதாகக் கடலாடு காதையில் அமைத்துக் காட்டுகின்றார். இந்திர விழவில் செம்மைப் படிந்த கண்ணுடன் மகிழும் மாதவியையும், துன்புறுங் கருங்கயற்கண் கண்ணகியையும் இணைத்துக் காட்டிக் கதைப் போக்கைச் சிறப்புறச் செய்கின்றார் ஆசிரியர்.

''கள்ளுக நடுங்கும் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன''

என்று மாதவிக்கு நேரவிருக்கும் துன்பமெனும் வருபொருளை அடிகள் உணர்த்திவிடுகின்றார்.

கடலாடு காதையில் இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல் முதல், அயிராணி ஆடிய கடையம் வரை பதினொரு வகை ஆடலையும் ஆடுகின்றாள் மாதவி. இசைக் கலையிலும், அழகிலுஞ் சிறந்த விஞ்சையன் ஒருவனும், அந்தரத்துள்ளோரும் வந்து அவள் ஆடலைக் கண்டு களிக்கின்றனர்.

"மாதவி மரபின் மாதவி இவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திப
மேதகு சிறப்பின் விஞ்சையன் அன்றியும்
அந்தரத் துள்ளோர் அறியா மரபின்
வந்து காண்குறூஉம்"

என்று ஆசிரியர் அமைத்துக் காட்டுகின்றார். மக்களும், வானவர்களும் கண்டு வியக்கும்படி கலையின்பத்தை அவள் பொதுவாக்கிக் கோவலனுடன் கொண்ட இன்ப வாழ்வுடன், தனக்கு இளமையிலிருந்தே ஈடுபாடு மிக்க கலை வாழ்வையும் உடன் வளர்க்கும் நிலை கண்டறிய வியலுகின்றது. சாலை இளந்திரையன், தமது 'சிலம்பின் சிறுநகை' எனும் நூலில், தன் கலை வாழ்வின் இடையே வந்த கோவலனிடம் மாதவி முழு அன்பையுஞ் செலுத்தி வாழ்ந்த நிலையைத் திறனாய்து கூறுவது பொருத்தமுடைத்தாய் அமைகின்றது.

மாதவி ஓடிப் பறித்து வரவில்லை
காதல் வீசிக் கலைத்தும் வரவில்லை
ஏதோ பழக்க வழக்கம் இருந்தபடி
'ஈதோ கணிகை இளையாள்' எனக்கேட்டு
வந்தான், புதுமலரின் மாமணத்தில் உட்கார்ந்தான்
சிந்தும் அதன்தேனில் நெஞ்சைக் கிடத்தினான்
அம்மலரும் தன்நெஞ்சின் அன்புமனம் தேயாமல்
செம்மைப் பணிவிடையாம் தீந்தேன் குறையாமல்
நின்றாள்; அவன்மட்டும் நில்லாமல் போவானோ
ஒன்றாய் இணைந்து விட்டான் உள்ளம் நிறைந்து விட்டான்

என்று கோவலன், மாதவியால் 'விடுதலறியா விருப்பினன்' ஆனதன் காரணத்தை ஒருவாறு விளக்கிக் காட்டுகின்றார்.

மாதவியைத் தன்னெஞ்சகத்தே நிறுத்தித் தனக்கே உரியவளென எண்ணங் கொண்டிருக்கும் கோவலன், அவளிடத்து அமைந்த கலை யாவரும் நுகர வேண்டிய பொதுமைச் செல்வம் என்பதை ஒரு கணம் மறந்து விடுகின்றான். எதையும் தனதாக்கும் (possessive nature) மனித இயல்பு மேலோங்கி நிற்கின்றது. விஞ்சையரும், மற்ற மக்களும் மனங் கொள்ளும்படி இந்திரவிழவில் அவளாடிய போது, கண்டோர் அவள் ஆடலைச் சுவைத்த முறை அவள் கணிகையர் குலத்தவள் என்பதைக் கோவலனுக்குச் சுட்டிக்காட்டியது போல் அமைந்து விடுகின்றது.

'ஆடலுறு கோலமும் அணியுங் கடைக்கொள்
ஊடற் கோலமோ டிருந்தோன்

என்றே ஆசிரியர் அமைத்துக்காட்டுகின்றார். அழகைச் சுவைக்கும் அவனுடைய கலைப்பண்பை உணர்ந்திருந்த மாதவி, பின்னர்ப் பல நறு மணப் பொருள்களுடனும் அணிகளுடனும் புதுக்கோலம் புனைந்து அவன் மனங் கவர்ந்து கூடலில் மகிழ்வித்தாளெனினும், அந்த முறையும் கோவலனின் உள்ளத்தில் நிலையான அன்பை நிறுத்த முடியவில்லை என்பதைக் கானல்வரிப் பாடலின் போது அவன் பிரிந்து செல்லும் நிகழ்ச்சியால் உணர முடிகின்றது. செல்வச் செழிப்புடன், கலையுணர்வு கலந்து அவள் புனைந்து கொள்ளும் கோலமும், அணியும் உளங் கவர்வனவாக அமைகின்றன. பத்துத்துவர், ஐந்துவிரை, முப்பத்திருவகை ஓமாலிகை ஊறின நீரில் குளித்து, அகிற்புகையிற் கூந்தலை உலர்த்திக் கத்தூரி ஊட்டி, அணிகலன் பூட்டி நீலச் சிதாரை உடுத்திக் கோவலனைக் களிப்பூட்டினள் மாதவி. காலமும், பழக்கமும் உவர்ப்பூட்டாதபடி உவப்பூட்டத் தெரிந்தவளே காவியக் காதலி. இதனையே வள்ளுவர்,

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்ற அருமையான குறளில் அழகாகக் கூறியுள்ளார்.

மாதவி தன்னைப் புனைந்து கொள்வதற்குச் செய்யும் கோலங்கள் அவள் ஆரவாரமிக்க செல்வச் செருக்குள்ளவள் என்று நினைப்பதற் கிடமில்லை. அடைக்கலக் காதை மூலம் அவள் கோவலன் செய்யும் பல வகை அறங்களுக்குக் கைகொடுத்து நின்றவள் என்னும் உண்மை புலனாகின்றது. கோவலன், தன் முன்னோருள் ஒருவனைக் காப்பாற்றிய தெய்வத்தின் பெயரைத் தன்மகள் மணிமேகலைக்கு இட்ட விழவின் போது மாதவியோடிருந்து இரவலர்க்குப் பொன்மாரி வழங்கினான்.

"துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எம்குல தெய்வப் பெயரீங்கு இடுகென
அணிமே கலையார் ஆயிரம் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையின் பொழிய"

என்று ஆசிரியர் அமைத்துக் காட்டித் தாய்மைக் கனிவுடன் நின்ற மங்கலமடந்தை மாதவியின் விலையற்ற உயர்வை உணர்த்தி விடுகின்றார்.

2

ஆக்வே, மாதவி தன் கலையுள்ளமொடு கோவலனின் இன்பத்திற்காகவே ஆடம்பரமிக்க புனைவுகளில் ஈடுபட்டாளென உணர்ந்து கொள்ள முடி கின்றது. அவள் பிறந்த குலம் அவள் நல்லுணர்வை மறைத்துக் காட்டு கின்றது.

இந்திரவிழவின் இறுதி நாளில் மாதவி கடல் விளையாட்டயரக் 'காண்டல் விருப்பொடு வேண்டினளாகிக்' கோவலனும் காதல் மனை யாள் மனமகிழப் புறப்பட்டனன். வான வண்கையனுகிய கோவலன் அத்திரி ஏற, மானமர் நோக்கியும் வையமேறிச் சென்றனர். அங்குப் புதுமணற்பரப்பில் ஓவிய எழினிச் சூழக்கட்டி, வெண்கால் அமளிமிசை கோவலன் தன்னெடு மிருந்த மாதவி, தோழி கையதாகிய யாழினை வாங்கி, இசையை எழுப்பிப் பண்வகையாற் பரிவு தீர்ந்து கோவலனிடம் கொடுக்கின்றுள்.

> ''சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து
> மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி''

எனும் வரிகளில் அடிகள், சிறந்த யாழிற்கு மைத்தடங்கண் மணமக ளிரை உவமையாக்குகின்றுர். குலமகளிர் தம் அரும்பெரும் பண்புகளா னும், செயல்களானும் உலகினை மகிழ்வித்தற்போல், சிறந்த யாழும் தன்கண் எழும் இன்னிசையால் இருமா நிலத்தின் இன்புறுத்துவதால் உவமைப் பொருத்தமுடன் இலங்குகின்றது. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனின் மகனுய், அரண்மனையின் அரச செல்வத்தில் வாழ்ந் திருந்த இளங்கோவடிகள் மாதவிபால் அமைந்த கலைச்சீர்மையும், ஆடம்பரப் போக்கையும் நன்கு அமைத்துக் காட்ட முடிகின்றதென லாம். யாழினை, மாதவி கோவலனிடம் கொடுப்பதற்கு முன்னர் எண் வகையான் இசையெழுப்பி, அவ்இசையின் கூறுபாட்டினைத் தன் செவி யாற் சீர்தூக்கி யறிதற்கு யாழது நரம்பின்மேல் விரல்கள் செல்லும் அழகினை, அடிகள்,

> ''மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்
> பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர''

என்கின்றுர். மாதவியிடமிருந்து யாழ்கொண்ட இன்கலைத் துணைவ னும்,

> ''காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்
> மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்''

என்று அமைக்கின்றுர் ஆசிரியர். இன்பப் போக்கில் திளைத்திருந்த வன், தமிழ் மரபின் வழிவந்த அகத்துறைப் பொருட்களைத் தன் இசை

யில் வைத்தமைத்துப் புலமை நயத்தொடு பாடத் தொடங்குகின்றான். அகப்பாடல் நெறிப்படி பெயர் சுட்டாது இருவருமே கானல்வரிப் பாடல் இசைக்க, அவற்றின் உட்பொருளுணரும் கலைச் செல்வரிருவரும் ஊடற் கொண்டு பிரியும் 'நுண்ணுணர்வை அறிந்து வியத்தற்பாலதாகும். மனந்திறந்து பாடும்போது, அடிமனத்தில் பதிந்திருக்கும் உணர்ச்சி களே இசையாக வெளிவர இயலும். நெஞ்சங் கலந்து பேசியபோது, கோவலனை உறுத்திக்கொண்டிருந்த உள்ளுணர்வுகள் முழுவடிவங் கொண்டு வெளிப்பட மாதவியால் ஐயங்கொண்டு பிரிகின்றான். மாதவி யின் மனமகிழ்வதற்காகத் தொடங்கிய அவன் பாடல், அவள் வாழ்வின் அவலத்திற்கு வழிகோலி நிற்கின்றது.

### மாதவி பாடிய கானல் பாணி:

ஒரும் தமிழ் ஒரு மூன்றும் உலகு இன்புற அமைத்த சேரன் தெரித்த சிலப்பதிகாரக் காப்பியம் பீடுநடை கொண்டு சிறந்த கதைத் திருப்பங்களுடன் அமைகிறது. அதுவும் காப்பியத்தின் அவலச் சுவை இலக்கியங் கற்போர்க்கு இன்பம் தந்து வாழ்க்கை உண்மைகளைத் தெளிவுபடுத்துவதாகும். கலைகளுக்கோர் அரசியாய்த் திகழ்ந்த மாதவி யின் வாழ்க்கையை அவலக்காடாக்கிக் காப்பியத்தின் மிகச் சிறந்த திருப்புமையமாக அமையும் கானல்வரி, அறிஞர் பலரின் ஆய்வுக்கு உட்பட்டதென்றாலும் அது அறிதோறும் அறியாமை உணர்த்தி புதுப் புதுச் சுவைகளை வாரி வழங்கிக்கொண்டே இருக்கிறது.

கலை தந்த இன்பப் போக்கில் திளைத்திருந்த கோவலனும், மாதவி யும் தமிழ் மரபின் வழிவந்த அகத்துறைப் பொருட்களைத் தம் இசை யில் வைத்தமைத்துப் புலமை நயத்தோடு யாழ் மீட்டிப் பாடுகின்றனர். தொடுக்கப்பட்ட மலர்மாலையைக் கண்டு களிக்கின்றவனைக் காட்டிலும் மாலையைத் தொடுத்தவனுக்கே உள்ளே தொடர்ந்து செல்லும் நூலின் இழையைப் பற்றி நன்கு தெரியும்.

''மக்கள் நுதலிய அகனைந் திணையின்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்''

என்னும் அகப்பாடல் நெறிப்படி பெயர்சுட்டாது இருவருமே கானல் வரிப்பாடல் இசைத்தாலும் அவற்றிடையே இழையோடும் நுண்ணு ணர்வை இருவருமே அறிகின்றனர். உலகம் முழுவதும் இருளில் மூழ்கிக் கிடக்கும் வேளையில் இருபுறங்களிலும் மரங்கள் மண்டிக் கிடக்கும் சாலையில் உந்துவண்டி தனக்குமட்டும் ஒளிபாய்ச்சிக்கொண்டு தன்வழியில் ஓடுவது போல் இருவரும் தம்மை மறந்த நிலையில் அவர்

தம் மனங்கள் பாடல்கள் மூலம் தூங்காத உணர்வுகளை ஒருப்படுத்தி வெளியில் கொட்டி விடுகின்றன. மனந்திறந்து பாடும்போது அடிமனத்தில் (Subconcicus mind) பதிந்திருக்கும் உணர்ச்சிகளே இசையாக வெளிவர இயலும்.

## ஊடலும் துன்ப வாழ்க்கையும்

கோவலன், காவிரியைப் பெண்ணாக்கிச் சோழனை அவள் கணவனாக உருவகப்படுத்தி அவன் வடநாட்டுக் கங்கையை வென்றாலும், குமரிக் கடற்பகுதியைத் தன் நாட்டுடன் இணைத்தாலும் ஊடல் கொள்ளாமலிருப்பது—மங்கை அவளது பெருங்கற்பின் திறமென வியந்து பாடுகின்றான். கோவலனின் அடிமனத்தில் என்றும் உறைந்து கொண்டிருந்தவள் கண்ணகி. தான் மாதவியுடன் வாழ்ந்த காலத்தும் தன்னைப பழித்துக் கூறாது, பொறுமையுடன் நின்ற வாழ்வைக் கோவலன் உன்னி உணர்ந்து கூறுவது போல் அமைகின்றது இப்பாடல்.

''திங்கள் மாலை வெண்குடையான் சென்னி
செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி''

என்றும்,

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி'

என்றெல்லாம் அவன்நெஞ்சம் வியந்து வழிப்பட்ட பெருங்கற்பின் திறத்தைக் காவிரிப் பெண்ணின் மேல் ஏற்றி ஆற்றுவரிப் பாடலைப் பாடுகின்றான்.

— தொடரும் —

# அவிநயம்
## (மறைந்த இலக்கண நூல்)

கோ. விசயவேணுகோபால், M. A.,
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

மறைந்த தமிழ் நூல்கள் பல. அவற்றுள் அவிநயமும் ஒன்று. இந்நூலைப் பற்றிய குறிப்புக்கள் யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, வீரசோழியவுரை, பன்னிரு பாட்டியல் ஆகியவற்றுள் நமக்குக் கிடைக்கின்றன. இக்குறிப்புக்கள், மேற்கோளாகக்காட்டப்பட்டுள்ள சூத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

### 1. அவிநயத்தின் எழுச்சி:

இன்று தொல்காப்பியம் எல்லோராலும் போற்றப்படும் தனிப்பெரும் இலக்கண நூலாகத் திகழ்கின்றது. அஃது இந்நிலையை அடைய ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய ஓரியக்கமே காரணம் எனச் சொல்லலாம். பழைய உரையாசிரியர் இளம்பூரணரே தொல்காப்பியச் சூத்திரங்கள் பலவற்றிற்குத் தெளிவான உரை கூறும் நிலையிலில்லை என்பதைப் பார்க்கிறோம். எனவே இதன் மூலம் இளம்பூரணருக்கு முந்திய காலத்தே தொல்காப்பியம் எல்லோராலும் போற்றிக் கற்கப்பட்ட இலக்கண நூலாக இல்லை என்பது விளங்குகின்றது. ஆனால் இளம்பூரணர் காலத்திற்கு முன்பாகவே தொல்காப்பியத்திற்குப் புத்துயிர் வழங்கும் முயற்சிகள் துவங்கப்பட்டன என்பது யாப்பருங்கல விருத்தியின் (கி. பி. 10ஆம் நூற்றாண்டு) மூலம் நமக்கு நன்கு விளங்குகிறது. யாப்பருங்கல விருத்தி தொல்காப்பியத்தினின்றும் பல சூத்திரங்களை மேற்கோள் காட்டுவதனோடு "தொல்காப்பியப் புலவோர்" (யா. வி. பக்.-30) என்பது போன்ற புகழ் மொழிகளால் அவரைப் போற்றுவதினின்றும் இதனை நன்குணரலாம்,

இந்நிலையில் தொல்காப்பியத்தின் புகழை மறைக்கின்ற அளவினுக்கு அக்காலத்தே புகழ்பெற்றிருந்த நூல் எதுவென்ற கேள்வி நமக்கு எழுகிறது. பழைய உரைகள் பல பழைய ஆசிரியர்களைப் பற்றி நமக்குச் சில குறிப்புக்களைத் தருகின்றன. குறிப்பாக யாப்பருங்கல விருத்தியுரை நமக்குப் பழைய இலக்கண ஆசிரியர்கள் பலரின் பெயர்களையும் அவர்கள் இயற்றிய நூல்கள் இன்னின்ன என்பதனையும் விளக்கு

கின்றது. நன்னூலுக்கு உரையெழுதியவர்களுள் பழமையானவ ரான மயிலைநாதர் முப்பெரும் இலக்கண ஆசிரியர்களைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் அகத்தியர், தொல்காப்பியர், அவிநயனார் ஆவர். அவிநயனாரைப் "புவிபுகழ் புலமை அவிநயன்" எனவும், தொல்காப்பியத்தை "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியம்" எனவும், அகத்தியரை "மிகத்தெளி கேள்வி அகத்தியனார்" எனவும் குறித்துள் ளார். இவற்றுள் "புவிபுகழ் புலமை அவிநயன்" என்ற சொற்றொடர் அவிநயம் ஒரு காலத்தே உலகத்தோரால் பெரிதும் போற்றிப் பயிலப் பட்டு வந்தது என்பதை நமக்கு விளக்கிநிற்கிறது. எனவே தொல்காப் பியத்திற்குப் பின் பெரிதும் போற்றப்பட்ட இலக்கண நூல் அவிநயமே என்பது விளங்கும்.

## 2. நூல், ஆசிரியர்:

இந்நூலாசிரியரைப் பொதுவாக உரையாசிரியர்கள் "அவிநயனார்" என்ற பெயராலேயே குறிப்பிடுகின்றனர். அவிநயனார் இயற்றியதாக லின், இந்நூல் அவிநயம் என்ற பெயர்பெற்றது. காலஞ்சென்ற டாக் டர் சோமசுந்தரபாரதியாரவர்கள், பண்டைக் காலத்தே ஆசிரியன் பெயரையே நூற்குப் பெயராக வழங்குதல் வழக்கமெனவும், பிற் காலத்தே வடமொழியிற் போல ஆசிரியர் பெயரின் ஈற்றின்கண் உள்ள பால்விகுதியை நீக்கி மகரவொற்றுப் பெய்து நூற் பெயரை வழங்குதல் வழக்கமாயிற்று என்றும் கூறுவர்.

நன்னூல் மயிலைநாதருரையைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சா. அவர்கள், "அவிநயம்" என்பதனை "அவினயம்" என எழுதும் வழக்கமு முண்டு என்பதனைக் குறிப்பிட்டுள்ளார். (நன். மயிலை. பக்.-iii) அவிநயத்திற்கு "அவிநயர் யாப்பு" (யா. காரிகையுரை-பக். 1) என வேறோர் பெயருண்டென்றும் கூறுவர்.

இவர் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர் என்பது,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ்த் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

என்ற புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தான் விளங்கும் என்பர். காலஞ்சென்ற திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொல்காப்பி யரை அகத்தியரின் மாணவர் எனக் கூறுதல் பிற்கால வழக்கென்றும்

(இ. பி. 10ஆம் நூற்றாண்டு) பன்னிரு படலப் பாயிரச் செய்யுள் கூறும் கூற்று உறுதியுடன் நம்பக்கூடிய நிலையிலில்லை எனவும் மறுத்துக் கூறியுள்ளார். (S. Vaiyapuri Pillai, History of Tamil Lang. & Literature–p. 65). மேலும் உரையாசிரியர் இளம்பூரணர் தொல்காப்பியப் பொருளதிகார உரையின்கண் "பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது" எனக் கூறியுள்ளமையும் ஈண்டு ஒப்பு நோக்கல் வேண்டும். பன்னிரு படலத்துள் இருந்து சில சூத்திரங்கள் மட்டுமே இளம்பூரணர் உரை மூலமும், வீரசோழியவுரை மூலமும் நமக்குக் கிடைக்கின்றன. நூல் முழுதும் கிடைத்திலது. எனவே இவற்றைக் கொண்டு எதுவும் கூறுதற்கில்லை.

### 3. அவிநயனாரின் வேறு நூல்கள்:-

அவிநயனார் அவிநயத்தைத் தவிர வேறு நூல்கள் சில எழுதியதாகவும் அறிகின்றோம். அவை நாலடி நாற்பது அவிநயனார் கலாவியல், அவிநயனார் பாட்டியல் என்பன. இவற்றைக் குறித்து ஒவ்வொன்றாய்க் காண்போம்.

(அ) நாலடி நாற்பது:- இது நாலடி நாற்பது என்னும் அகசப்புறனடை எனவும் வழங்கப்படும் (யா. விருத்தியுரை பக்கம்-32). இது யாப்பருங்கலத்திற்கு யாப்பருங்கலக் காரிகை என்ற சார்பு நூல்போல அவிநயத்திற்குச் சார்பு நூலாம். இது, யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் "வேதத்திற்கு நிருத்தமும், வியாகரணத்திற்குக் காரிகையும், அவிநயர் யாப்பிற்கு நாலடிநாற்பதும் போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து" எனக் கூறுவதினின்று விளங்கும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் முதல், சார்பு நூல்களை ஓராசிரியரே எழுதியமைபோல அவிநயமாகிய முதல் நூலும் இச் சார்பு நூலும் அவிநயனாராலேயே எழுதப்பட்டன என்பது தெளிவு. நாற்பது வெண்பாக்களாலாகிய நூலாகலின் நாலடி நாற்பது எனப்பட்டது. இன்று நமக்கு நாற்பது வெண்பாக்களும்கிடைத்திலவாயினும், யாப்பருங்கல விருத்தியுள் ஐந்து வெண்பாக்களும், நன்னூல் மயிலைநாதருரையில் இரண்டும் (இரண்டும் கடை இரண்டடிகள் மட்டுமே மேற்கோள் காட்டப்பெற்றுள்ளன.) மேற்கோளாய்க் காட்டப் பெற்றுள்ளன.

(ஆ) அவிநயனார் கலாவியல்:- இப்பெயரில் ஒரு நூல் இருந்ததென்பது நவநீதப் பாட்டியல் பழைய உரை மூலம் அறியக் கிடக்

கின்றது. (நவநீதப்பாட்டியல் 9', பழையவுரை). நவநீதப் பாட்டியலைப் பதிப்பித்த திரு எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் "கலாவியல்" என்பதனைக் "கவியியல்" எனக்கொள்ளலாம் போலுள்ளது எனக் கூறிப் 'பொய்கையார் பாவியல்" என ஓரிடத்திற் குறிக்கப்பட்டுள்ளது இவ்வூகத்தை வலியுறுத்தும்" (நவநீதப்பாட்டியல், பக்:-ix) எனக் குறித்துள்ளார். அவிநயனார் கலாவியற் சூத்திரங்கள் இரண்டு மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டும் 'தொலைவு' (நவ. 91) என்பதனைப் பற்றிக் கூறும் சூத்திரத்தின் கீழே மேற்கோள்களாகப் பழையவுரைகாரரால் காட்டப்பட்டுள்ளன. தொலைவு என்பது அவையின்கண் நிகழும் வாதத்தில் பொருளில கூறல், புனருத்தி தோன்றுதல், புன்சொற்களால் மருள வழங்கல், வழுப்படச் சொல்லல், மற்றொன்றினைத் தெருளவுரைத்தல், பயனில்ல சொல்லுதல், என்பனவாகும். யாப்பருங்கல விருத்தியுரையும் "தொலைவெனப் படுபவை சொல்லுங்காலை..." என்ற பழைய சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளது.

இவ்வாறு அரசர் முன்னிலையில் வாதம் முதலியன நிகழ்த்துவோருக்குரிய விதிகள் கூறும் நூல்கள் பல அக் காலத்து இருந்தன. அவை இன்று மறைந்தன. எனவே இவ்விதிகளின் பொருள் உணர்வது அரிதாயுள்ளது.

(இ) அவிநயனார் பாட்டியல்: அவிநயனார் சூத்திரங்கள் சில பன்னிருபாட்டியலுள்ளும் காட்டப் பெறுகின்றன. அவிநயனாரோடு மேலும் பொய்கையார் போன்ற புலவர்களின் சூத்திரங்களும் காட்டப்பட்டுள்ளன. பன்னிரு பாட்டியலைப் பதிப்பித்த திரு. கா. ர. கோவிந்தராச முதலியார் "ஆசிரியர் அகத்தியனார் மாணவர் பன்னிருவர் கூடி இயற்றியது எனப்படும் பன்னிரு படலம் போலப் பன்னிரண்டு புலவர்களால் இயற்றப் பட்டது பன்னிரு பாட்டியல் எனச் சிலர் கருதுவது பொருந்தாது" என்று விளக்கிப் "பொய்கையார் முதலிய பதின்மூவராலும் வெவ்வேறு பாட்டியல் நூற்கள் செய்யப்பட்டன என்பது பெறப்படுகின்றது (பன்னிரு-பக்:4)" எனக் குறித்துள்ளார். இதனான் அவிநயனார் பாட்டியல் என ஒன்றும் யாத்திருத்தல் வேண்டும் என்ற கருத்துப் பெறப்படுகின்றது. அவிநயனார் இதனைத் தனி நூலாகச்செய்திருப்பாரா என்பது ஐயத்திற்குரியது. மேற்கோளாகக் காட்டப்பெற்ற சூத்திரங்கள் வையாபுரிப்பிள்ளையவர்கள் கொண்ட "கவியியல்" (முன்னர்க் கூறிய அவிநயனார் கலாவியல் குறிப்புரையைக் காண்க) என்ற ஊகத்தினைச் சரியெனக் கொள்ளின் அவ்வியலின் பாற்பட்டனவாகக் கொள்ள இடமிருக்கின்றது. இதனை அறிஞர் ஆய்ந்து உண்மை காண்பார்களாக.

அவிநயனார் சூத்திரங்களாகப் பன்னிரு பாட்டியலுள் 15 சூத்திரங்கள் காட்டப்பெற்றுள்ளன. இவற்றினைப் பற்றிப் பின் நூலினுள் விரிவாகக் காணலாம். (அவிநயனார் சூத்திரங்களை விளக்கங்களுடன் அதிகார வாரியாகப் பின் வெளியிடலாமென உள்ளேன்.) இவற்றுள் குறிப்பாகப் பெண்பாற்கு ஏழு பருவங்கள் பிரித்துச் கூறுதலைப் போன்றே ஆண்பாற்கும் (பாலன், மீளி, மறவோன், திறலோன், காளை, விடலை, முதுமகன் என) ஏழு பருவங்கள் கூறியுள்ளமையைக் கூறலாம்.

## 4. அவிநயனார் காலம்:

காலஞ்சென்ற கா. சு. பிள்ளை அவர்கள் "தொல்காப்பியருக்கு முன்னர் அவிநயம் என்ற ஒரு நூல் இருந்ததென்றும் அதற்குப் பல்லவதரையர் என்பார் இயற்றிய உரை ஒன்று இருந்ததென்றும் நன்னூல் மயிலைநாதருரையில் காணப்படுகின்றது" (இலக்கிய வரலாறு முதற்பாகம்-பக். 68) என்று குறிப்பிட்டுள்ளார். திரு. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் "பெரும்பாலும் அவிநயமும், பனம்பாரமும் தொல்காப்பியத்தோடு சமகாலத்தன என்று கொள்ளலாம்" (History of Tamil Language and Literaturs page 72) எனக் கூறுவர். இவர் கூற்றுப்படித் தொல்காப்பியம் பிற்காலத்ததாகலின் இது பொருத்தமுடையதே. ஆனால் தொல்காப்பியம் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது என்பது பேராசிரியர் தெ. பொ. மீ. முதலியோரால் நன்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. (A History of Tamil Language, Deccan College, Poona-6.)

சூத்திரங்களை நூற்பாவில் யாப்பதே பண்டைய வழக்கு. வெண்பாவினுற் சூத்திரங்கள் யாத்தமை பிற்கால வழக்கே. மாபுராணம், பூதபுராணம் முதலியன வெண்பாவால் யாக்கப்பட்டுள்ளன. இவையும் தொல்காப்பியத்திற்குச் சம காலத்தன என்பர். ஆனால் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களே இவை வெண்பாவால் யாக்கப்பட்டிருத்தலின் பிற்காலத்தனவே எனக் கூறுவர். (History, page 72). அவிநயத்துள் வெண்பாவானும் சூத்திரங்கள் யாக்கப்பட்டுள்ளன என்பதை முன்னரே கண்டோம். எனவே அவிநயமும் பிற்காலத்ததாதல் வேண்டும். திரு. மயிலை. சீனிவேங்கடசாமி அவர்கள் "இது கடைச் சங்க காலத்துக்குப் பிற்பட்ட நூல். இ. பி. 5 அல்லது 6-ஆவது நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் (மறைந்துபோன தமிழ் நூல்கள்-பக்; 17) எனக் கூறுவர்.

இந்நிலையில் அவிநயச் சூத்திரங்கள் பெரும்பான்மையும் யாப்பருங் கல விருத்தியுள் மேற்கோளாகக் காட்டப்பட்டிருத்தலின் யாப்பருங்கல விருத்திக்கு முன்பு—அதாவது கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்—பெருவழக்காயிருந்த ஒரு நூல் எனக்கொள்ளுதலே பொருத்தமுடைய தாகத் தோன்றுகிறது.

## 5. சமயம்

சைனர், ஒலி அணுக்கள் இயைதலினாலேயே எழுத்துக்கள் பிறக் கின்றன என்ற கருத்துடையவர்கள். இக்கருத்தினைக்கொண்ட அவிநயச் சூத்திரம் ஒன்று மயிலைநாதருரையில் மேற்கோளாகக் காட் டப்பெற்றுள்ளது. அது வருமாறு:—

"ஆற்ற லுடையுயிர் முயற்சியி னணுவியைந்
தேற்றன வொலியாய்த் தோற்றுதல் பிறப்பே"

(நன். மயிலை. பக். 31)

இதனுள் "அணுவியைந்து" என்ற சொற்றொடர் சைனக்கொள்கையை விளக்கி நிற்றல் காண்க.

இனி, யாப்பருங்கல விருத்தியுள்ளும், யாப்பருங்கலக்காரிகையுரை யினுள்ளும், திருப்பாவை அல்லது திருவெம்பாவைப் பாடல் ஒன்று மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இந்நூல் அக்காலத்து வழங்கி யது போலும். இன்று கிடைத்திலது. உரையாசிரியர் இப்பாட்டினை "இஃது அவிநயனார் காட்டிய பாட்டு" எனக் குறிப்பிட்டுள்ளார். (யா. வி. பக்: 344, 345—யா. கா. 44 உரை) அப்பாடல்,

"கோழியுங் கூவின, குக்கி லழைத்தன, தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ"

எனத் தொடங்குகிறது, இப்பாடலுள் காணப்பெறும் "ஆழிசூழ் வையத் தறிவனடி யேத்தி" என்ற சொற்றொடரே நமக்கு இங்கு வேண்டுவது. "அறிவன்" என்றது அருகதேவனைக் குறிக்கும். ஆக, அணுவியைதலினால் ஒலி பிறக்கும் என்ற சைன சமயக் கொள்கை யைக் கூறுவதினாலும் அருகனைப் போற்றும் பாடலொன்றினை மேற் கோளாகக் கொண்டிருத்தலினாலும் இவரைச் சைனரென்றே கொள் ளத்தகும்.

## 6. அவிநய நூலின் அமைப்பு:

*(1)* எழுத்ததிகாரம்: இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் சூத்திரங்களைக் கொண்டே நாம் இந்நூலினது அமைப்பை

ஊகிக்க வேண்டியுள்ளது. பெரும்பான்மையான சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியுரையுள் காணப்படுகின்றமையின் அவை பெரும்பாலும் செய்யுளியல் பற்றியனவாகவே உள்ளன. யாப்பருங்கல விருத்தி பக் 22, 27, 28, 29, 30, 31, சிரோத்து பக். 69 இல் காட்டப்பட்டுள்ளவற்றானும் (விருத்தியுள் காட்டப்பெற்றவையே காரிகையுரையிலும் காட்டப்பட்டிருத்தலின் அவை இங்கே குறிக்கப் பெறவில்லை.) நேமிநாதம் பாயிரவுரை (பக்:2)யில் கூறியிருப்பவற்றானும், நன்; மயிலை, உரை, பக்: 23, 31, 43, 75 ஆகியவற்றுள் காட்டப் பெற்றுள்ளவற்றானும் அவிநய நூலுள் எழுத்துப் பற்றிய பகுதி இருந்ததென்பது விளங்குகிறது.

இச் சூத்திரங்கள் முறையே குற்றெழுத்து, நெட்டெழுத்துக்கள், அவைகளின் மொத்தஎண்ணிக்கை, உயிர்களின் மொத்தஎண்ணிக்கை, (உயிர் பன்னிரண்டோடு உயிர்மெய் 216ஐயும் சேர்த்து "இருநூற் றிருபத்தெட்டு விரிந்தன உயிரே'' என்பர்) அவை வன்மை, மென்மை, இடைமை என மூவகையான் அடங்குதல் (யா. வி. பக். 22).

குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றின் பிறப்பு (யா. வி. பக். 27) ஆய்தத்திற்கான வேறு பெயர்கள் (பக். 28) ஐகார, ஔகாரக் குறுக்கங்களின் மாத்திரை (பக். 29) போலி எழுத்துக்கள் (பக். 30) வன்மை முதலான மூன்றும் பிறக்குமிடங்கள் (பக். 69) ஆகியவை பற்றியும், எழுத்தியலை ஏழு வகையான் ஆய்ந்த முறை (நேமி. பாயிர வுரை - பக். 2) ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் (நன். மயிலை. பக். 23) அணுவியைந்து ஒலி பிறத்தல் (நன், மயிலை. பக். 31) நகரம் மொழிக்கு முதலாதல் (மயிலை. பக். 43) எழுத்து, சொல் வேறுபாடு (பக். 54) தமிழ்க்குரிய சிறப்பு எழுத்துக்கள், வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்கள் (பக். 75) ஆகியவை பற்றியும் கூறுகின்றன.

(2) சொல்லதிகாரம்:- அவிநயனார் சொல்லதிகாரம் இயற்றியிருந்தார் என்பது யாப்பருங்கல விருத்தி ஒழிபியல் (பக். 537) உரையினாலும், வீரசோழிய வேற்றுமைப் படலம் சூ : 34 உரையினாலும் "திணை பால் மரபு வினைச்சொல்....'' என்ற வீரசோழியச் (சூத் : கி. பக். 85) சூத்திரத்தானும் அச்சூத்திரவுரையினாலும், நேமிநாத (சூத் : 2?) உரை (பக். 45) யினாலும், மயிலைநாதருரை (பக். 57, பக். 147, 202, 243) ஆகியவற்றினானும், தக்கயாகப் பரணி தாழிசை 153 உரையினானும் விளங்குகிறது. இவை முறையே இடைச்சொல்,

உரிச்சொல் (யா. வி. 337) பற்றியும், ஆலும் ஆனும் மூன்றன் உருபுகள் என்பதனையும் (சூ : 34 உரை), திணை, பால், மரபு, வினா, செப்பு, இடம், சொல், வழு, தொகை, எச்சம், வேற்றுமை, காலம், மயக்கு ஆகியவற்றான் சொல்லினை ஆராய்தல் (வீ. சோ. சூ : 34) பற்றியும், சொற்கள் படர்க்கைக்கண் பால் விளங்கி நிற்கும் (நேமி. பக்: 45) என்பது பற்றியும், சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் என அடங்குதல் (மயிலை. பக்: 57) அழிதூஉ வகையின் பால் (அவி. பக்: 147) வினைச் சொல்லின் விளக்கம் (பக்: 202), சொற்கள் முன்மொழிப்பொருள், பின் மொழிப் பொருள் குறித்தல் (பக்: 243), பெயர்ச்சொல் ஈறு திரிதல் (த. யா.பரணி. 153 ஆம் தாழிசை உரை) ஆகியவை பற்றியும் விளக்கு கின்றன.

(3) பொருளதிகாரம்: இனி அவர் பொருளதிகாரமும் செய் திருந்தமை, யாப்பருங்கலவிருத்தி "இனி ஒரு சாரார் அகத்திணை, புறத் திணை, அகப்புறத்திணை என்ற மூன்று'படங்குமென்ப", "ஆமாறு அவிநயத்துட் காண்க" (ஒழிபியல் பக்: 532) எனக் கூறுவதினானும், யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள கந்தருவம் அல்லது களவு பற்றிய சூத்திரங்களானும் (பக்: 534 & 535) விளங்கு கின்றது.

(4) பிறஇயல்புகள்: பெருப்பான்மையான சூத்திரங்களை யாப்பருங்கலவிருத்தியுரை மேற்கோளாகக் காட்டுதலின் செய்யுளியல் பற்றி விரிவாகச் சூத்திரங்கள் யாத்துள்ளார் என்பது முன்னர்க் காட் டப்பட்டது. யாப்பருங்கலக்காரிகை யுரையாசிரியர் "அவிநயர் யாப்பு" எனக் கூறியிருத்தலும் காண்க.

பாட்டியல் தொடர்பான சில சூத்திரங்களும் பன்னிரு பாட்டிய லுள்ளும், நவநீதப் பாட்டியலுள்ளும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள் ளன என முன்னரே கண்டோம். பன்னிரு பாட்டியலுள் கூறப்பட் டுள்ள சூத்திரங்கள் அவிநய நூலுள்ளேயே ஒரு பகுதியைச் சேர்ந்த னவா அல்லது தனி நூலாக யாக்கப்பட்டதா என்பது விளங்கவில்லை. எனினும் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் ஊகத்தை ஏற்றுக் கொள்ளின் இச்சூத்திரங்கள் 'கவியியல்' என்ற இயலின் கீழ் வருவன வாகக்கொள்ள இடமுண்டு.

## 7. உட்பிரிவுகள்:

(அ) கணக்கியல்: அவிநய நூலின் உட்பிரிவுகளைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ளச் சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. சீர்கள்

அகவன் மகளிரைப் பற்றி நற்றிணைதரும் குறிப்பு வருமாறு:— 10. "மலை நாடான் நம்மைப் பிரிதலினால், நன்னுதலின் பசலை பரந்ததாக அதனை நோக்கி நம் அன்னை செம்முது பெண்டிரோடு முறத்தில் நெல்லைப் பரப்பிக் கட்டு வைத்து நம்மையும் எதிரில் நிறுத்திக் குறி கேட்குமாம்.

பிரிவாற்றாமையால் மெலிந்த தோழியின் நிலையை உயிர்த்தோழி செவிலிக்கு உணர்த்து முகத்தான் பேசுங்கால், கட்டு விச்சியைப் பற்றிய தோர் செய்தியும் வருவதாகிறது. அஃது இது:— 11. "அன்னையே ஒளி பொருந்திய நெற்றியினையும், தழைத்த மென் கூந்தலையும் உடைய தலைவியின் உடலில் அணியப் பெற்றுள்ள அணிகள் யாவையும் நெகிழச் செய்வித்த மருந்துகளால் தீர்க்க இயலாக் கொடிய நோயின் பொருட்டுப் பிறர் அறியாதவற்றைக் குறியான் உணரும் கட்டுவிச்சி முதலிய அறிவோரைத் தலைவி இவ்வாறு மெலிந்தமைக்குக் காரணம் யாதென வினவ அவர் தலைவிக்குத் தெய்வத்தான் இது நிகழ்ந்தது என்பர்."

ஈண்டு எடுத்துக் காட்டிய இலக்கியச் சான்றுகளால் அகவன் மகளிர் சங்க காலத்தில் பரவி இருந்தமை புலனும். இனிச் சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய காப்பியக் காலத்தும் கட்டு விச்சியர் காணப்படுகின்றனர் என்க. அக்காப்பியக் காலத்துள் எழுந்த தலைசிலைக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்துள் அகவன் மகளிர் தெய்வம் ஏறப் பெற்றுக் குறி உரைப்பதாகக் காட்டப்படுகிறது. சங்க காலத்தில் தன்னிலையில் அழுந்த நின்று குறி சொன்ன அகவன் மகளிர் காப்பிய காலத்தில் அவ்வாறு சொன்னதோடன்றித் தம்மேல் தெய்வம் ஏறத் தன்னிலை மறந்து தெய்வநிலை உற்றுக் குறி உரைத்ததும் உண்டு இதற்கு வெளிப்படைச் சான்று சிலப்பதிகார வேட்டுவ வரியில் சாலினி தெய்வம் ஏறப்பெற்றுக் கட்டுரை கூறுமாற்றைக் காண்க 12.

தமிழகத்தின் இடைக் காலத்தில் தோன்றிய பேரிலக்கியம் பெருங்கதையிலும் அகவன் மகளிரைப் பற்றிய குறிப்புண்டு. 13. பாகீரதி யூகி சூழ்ச்சியால் பித்துக்கொண்டாற் போலத் தெருவினில் செல்வாள். அப்போது அது கண்ட நகர முதிர்ப்பெண்டிர் "நாளை புறப்படும் படை யெழுச்சி யாதாயிற்று?" என்றறிவான் பொருட்டு அகவன் மகளிரை அழைத்து

விளக்கியமை விளங்குகிறது. மேலும் அவர் திருப்பாவை அல்லது திருவெம்பாவைப் பாடல் ஒன்றினை மேற்கோளாகக் காட்டியதினின்றும் பொதுமக்கள் இலக்கியங்களையும் மதித்துப் போற்றும் பெரும் பண்புகொண்டவர் என்பதனை வெளிக்காட்டுவதோடு பழைய புதிய இலக்கிய வகைகளில் அவருக்கிருந்த பயிற்சியினையும் காட்டுகிறது.

## 8. அவிநய உரையாசிரியர்:

"இப்பத்தெச்சமும் புவிபுகழ் புலமை யவினய நூலுட் டண்டலங் கிழவன் றகைவரு நேமி யெண்டிசை நிறைபெய ரிராச பவித்திரப் பல்லவ தரையன் பகர்ச்சியென் றறிக" என்ற நன்னூல் மயிலைநாதருரை மூலம் (பக்: 236) அவிநயத்திற்கு இராசபவித்திரப் பல்லவ தரையன் என்பார் உரையொன்று இருந்தமை விளங்குகின்றது. "தண்டலங் கிழவன்" என்றதனுன் அவர் அக்காலத்து ஒரு மாநில ஆட்சித் தலைவராகவோ (Governor), உயர்நிலைப் படைத் தலைவராகவோ (Commander) இருந்தனராதல் வேண்டும். மேலும் "எண்டிசை நிறைபெயர்" என்றதனுன் அக்காலத்து அவர் பெரும்புகழுடன் விளங்கியமையும் அறிகிறோம். மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் "தண்டலங் கிழவன்" என்பதற்குத் "தண்டலம் என்ற ஊரின் தலைவன்" என விளக்கம் தருவர். மயிலைநாதர் நன்னூல் உரையின்கண் இவருரையையும் தழுவியெழுதியுள்ளார் எனத் தெரிகிறது. இவ்வுரையாசிரியரின் காலம் முதலியன அறியக்கூடவில்லை. இவ்வுரை இப்போது கிடைத்திலது.

---

**1906 மே 26ஆம் நாளன்று நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழாவின்போது,**
**உயர்திரு. பாண்டித்துரைத் தேவரவர்கள் மீது,**
**திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் பாடிய பாட்டு**

" மாதவத்தான் மழைவேண்டிப் போயகத்தாற் கரியனிட்ட
மாலை தாங்கிப்
பூதலத்தார் செழியனைக் கண்டெவற்று லுஞ்சிறப்புப்
பொருந்தோ ரரம்
காதலித்தேம் அணிகின்றேம் உக்கிரபாண் டியப்பெயர்கொள்
காவல் லோய்நீ
மேதகச்சேர் சீர்த்தியொடு வாழவிறை யருட்பெருக்க
மிளிர்க வென்றே!
காப்பணியா மகிழ்பாண்டித் துரைவலவன் கைக்கொள்வளை
கடுப்பச் செங்கை
மீப்பொலியு நாற்சங்க மிளிர்மணிக ணிகர்த்தபல
வித்து வான்கள்
நாப்பொழியும் பிரசங்கம் பிரசங்கம் பொழிந்தென
நாமுட் கொண்டோம்
பூப்பயிறு மிப்பிறவி யெடுத்தகல மடுத்ததெனப்
புகல்வா மன்னே!"

(செந்தமிழ்; தொகுதி 4:8)

---

# "தமிழும் கோத்தமும்" - ஓர் ஒப்பியல் ஆய்வு

கோ. சுப்பையா, M. A,
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

ஒரு மொழிக் குடும்பத்தில் உள்ள பல மொழிகளிடையே காணப்படுகின்ற 'ஒலியியல்' (Phonology); 'சொல்லியல்' (Morphology); 'தொடரியல்' (Syntax) ஆகியவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்து விளக்கும் ஆய்வை 'ஒப்பியல் ஆய்வு' (Comparative Study) என்று மொழி இயல் அறிஞர்கள் கூறுகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு தமிழுக்கும், நீலகிரி மலைத் தொடரில் [1]கோத்தர்களால் பேசப்படும் கோத்த மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லியலில் இம்மொழிகள் காட்டும் ஒற்றுமை வேற்றுமைகளை முதலில் காண்போம்.

## சொல்லியல்:

பெயர் (Noun):- தமிழ், கோத்தம் இரு மொழிகளும் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாட்டைக் கொண்டுள்ளன. தமிழில் பெயரின்கண்ணும், வினையின்கண்ணும் ஒருமை, பன்மைப் பாகுபாடு தெளிவாக அமைந்திருக்கிறது. ஆனால் கோத்த மொழியில் பெயரின்கண் மட்டுமே இப்பாகுபாடு அமைந்து, வினையில் எண் பாகுபாடின்றி, ஒரே விகுதி பால் ஈறாக வழங்குகிறது. தமிழில் அஃறிணையில் பன்மை விகுதியாக 'கள்' உள்ளது. கோத்த மொழி 'கூள்' எனும் அஃறிணைப் பன்மை விகுதியைப் பெற்றிருக்கிறது.

எ. கா:-

தமிழ்:- மாடு : மாடுகள்
கோத்தம்:- ஆவ் : ஆவ்கூள்

மூவிடப் பெயர்கள் இவ்விரு மொழிகளிலும் காணப்படுகின்றன. தமிழில் தன்மை இடப்பெயரில் உளப்படுபன்மை (Inclusive Plural), உளப்படாப் பன்மை (Exclusive Plural) என்ற வேறுபாடு இயல்பான

1. கோ. சுப்பையா—'கோத்தர்கள்'—ஓர் அறிமுகம், செந்தமிழ், செப். '69, மதுரை.

சொல்லடிப் பெயரில் (Absolute form) காணப்படுகிறது. ஆனால் கோத்த மொழியில் இத்தகைய வேறுபாடு கிடையாது. அதாவது ஒரே சொல்தான் தன்மை இடப்பெயரில் கோத்த மொழியில் வழங்கப் படுகிறது.

மூவிடப் பெயர்கள்:—

| மொழி | தன்மை இடப்பெயர் ஒருமை | பன்மை உளப்படு | பன்மை உளப்படா | முன்னிலை இடப்பெயர் ஒரு | பன்மை | படர்க்கை இடப்பெயர் ஒரு | பன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் | நான் | நாம் | நாங்கள் (யாம்)[1] | நீ | நீங்கள் (நீர்)[1] | தான் | தாங்கள் (தாம்)[1] |
| கோத்தம் | ஆன் | ஆம் | — | நீ | நீம் | தான் | தாம் |

பழந்தமிழும் கோத்தமும் தம்மில் மூவகைச் சுட்டுப் பெயர்களைப் பெற்றுள்ளன. ஆனால் இக்காலத் தமிழில் இடைச்சுட்டுப் பெயர் வழக்கற்றுப் போய்விட்டது. கோத்த மொழியில் எல்லாச் சுட்டுப் பெயர்களிலும் அஃறிணைப் பன்மை கிடையாது. கோத்த மொழியில் இடைச்சுட்டில் உயர்திணை மட்டும் காணப்படுகிறது. உயர்திணையிலுள்ள இடைச்சுட்டில் உள்ள உயிர் நெடிலாக இருக்கிறது. இடைச் சுட்டில் அஃறிணையே கிடையாது.

மூவகைச் சுட்டுப் பெயர்கள்:—

| மொழி | திணை | அண்மைச்சுட்டு ஒரு | பன்மை | இடைச்சுட்டு ஒரு | பன்மை | சேய்மைச்சுட்டு ஒருமை | பன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் | உயர்திணை | இவன் இவள் | இவர் | உவன் உவள் | உவர் | அவன் அவள் | அவர் |
| | அஃறிணை | இது | இவை | உது | உவை | அது | அவை |
| கோத்தம் | உயர்திணை | இவ்ன் இவ்ள் | இவ்ர் | ஊன் ஊள் | ஊர் | அவ்ன் அவ்ள் | அவ்ர் — |
| | அஃறிணை | இத் | — | — | — | அத் | — |

இவ்விரு மொழிகளும் அகர, இகர உயிர்களைப் பெயரடைகளாகக் கொண்டுள்ளன. தமிழில் (பழந்தமிழ்) உகரப் பெயரடை உள்ளது.[2] தனிச் சொற்களும் பெயரடைகளாகப் பயன்படுவது இம்மொழிகளில் காணலாம்.

2. கோ. சுப்பையா—'கோத்தர் மொழியில் மூவிடப்பெயர்கள்', தமிழ்ப் பொழில், சூன்-சூலை, '70, தஞ்சாவூர்.

1 யாம், நீர், தாம் யாவும் பழந்தமிழ்ச் சொற்களேயாகும். இக்காலத் தமிழில் இவை பெருவாரியாக வழக்கில் இல்லை.

2. அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு (தொல்: எழுத்து: 31)

| எ. கா:- | தமிழ்: | கோத்தம்: |
|---|---|---|
| | அக்கழுதை | அ கட்த் |
| | இப்பெண் | இ பெமொக் |
| (பழந்தமிழ்) | உக்கொற்றன் | — |
| | நல்ல பையன் | ஒள்த்மொக் |
| | சிறிய வீடு | குன்த்பய் |

தமிழைப் போன்று கோத்த மொழியும் ஒன்று முதல் பத்து வரை எண்களைப்பெற்றிருக்கிறது. நூறு என்னும் பெயர் இவ்விரு மொழிகளிலும் உண்டு. கோத்தர்கள் ஆயிரத்தை 'சாவ்ர்ம்' என்று கூறுகின்றனர்.

| தமிழ் | — கோத்தம் | தமிழ் | — கோத்தம் |
|---|---|---|---|
| ஒன்று | — ஒற்ற் | ஆறு | — ஆர் |
| இரண்டு | — எய்ற்ற் | ஏழு | — ஏய் |
| மூன்று | — மூன்ற்ற் | எட்டு | — எட் |
| நான்கு | — நான்க் | ஒன்பது | — ஓர்பாத் |
| ஐந்து | — அன்ஜ் | பத்து | — பத் |
| நூறு | — நூர் | ஆயிரம் | — சாவ்ர்ம் |

உயர் எண்கள் (Higher Numerals) அமையும் முறை இவ்விரு மொழிகளிலும் வேறுபாடின்றிக் காணப்படுகின்றது.]

எண் + எண் — உயர்எண்.

எ. கா:—

தமிழ்:— பத்து + ஐந்து — பதினைந்து
நூறு + ஏழு — நூற்றிஏழு

கோத்தம்:— பத் + அன்ஜ் — பதன்ஜ்
நூர் + ஏய் — நூரேய்

தமிழ், கோத்தம் இரு மொழிகளிலும் ஏழு வேற்றுமை உருபுகள் காணப்படுகின்றன. கோத்த மொழியில் னகரம் இரண்டாம் வேற்றுமை உருபாக உள்ளது; ஆல், ஆர் இரண்டும் மூன்றும் வேற்றுமை உருபுகளாகவும் உள்ளன. ஆல் எனும் மூன்றும் வேற்றுமை உருபு உயர்திணைப் பெயரின்கண்ணும், ஆர் அஃறிணைப் பெயரின்கண்ணும் வழங்குகின்றன. இரு மொழிகளிலும் உள்ள வேற்றுமை உருபுகள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வேற்றுமை | தமிழ் | கோத்தம் | வேற்றுமை | தமிழ் | கோத்தம் |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வேற்றுமை | ஐ | ன் | ஐந்தாம் வேற்றுமை | இல், இருந்து | ல்த்ர் |
| [3]மூன்றும் வேற்றுமை[1] | ஆல் | ஆல்/ஆர் | ஆறும் வேற்றுமை | அது | த் |
| [3]மூன்றும் வேற்றுமை[2] | ஒடு | ஒட் | ஏழாம் வேற்றுமை | இல் | ல் |
| நான்காம் வேற்றுமை | கு | க் | | | |

கோத்த மொழியில் விளி வேற்றுமை உருபுகளாக ஓ, ஆ, ஈ, ஏ என்ற நான்கு நெடிலுயிர்கள் உள்ளன. விளிப்பவர் (Speaker) பெண் என்றால் அவர் ஓகாரத்தை விளி உருபாகப் பயன்படுத்துவர்; ஆண் என்றால் அவர் ஆகாரத்தைப் பயன்படுத்துவர். இறைவனை விளிக்கும் போது ஈகாரத்தையும், ஏனையவற்றை விளிக்கும்போது ஏகாரத்தையும் பயன்படுத்துவர். இத்தகைய தன்மை வடதிராவிட மொழியாகிய குர்க்க மொழியில் (Kurukh) தான் காணப்படுகிறது. மற்ற மொழி களில் காணப்படவில்லை.

எ. கா:—

(பெண்) அயோ! நீம் இய்க் வர்ம்—"அப்பா! இங்கு வாருங்கள்."
(ஆண்) அயா! நீம் இய்க் வாம்—" அப்பா! இங்கு வாருங்கள்."
(பெண்/ஆண்) சோய்மீ என் காபாத்—"கடவுளே! என்னைக் காப்பாற்று."
(பெண்/ஆண்) பக்யே நீ பாட்—"குருவியே! நீ பாடு."

**வினை** (Verb):-

தமிழில் வினைச்சொற்கள் மூன்று காலங்களைக் கொண்டுள்ளன. அவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன. ஆனால் பழங்

---

3. தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ஆல், ஒடு என்ற இரண்டையும் மூன்றும் வேற்றுமை உருபுகள் எனக் கூறியுள்ளனர். ஆனால் தற் கால இலக்கண ஆசிரியர்கள் (Modern Descriptive Grammarians) 'ஆல்' Instrumental Case—மூன்றும் வேற்றுமை உருபாகவும், 'ஒடு' Sociative Case உருபாகவும் விளக்கிக் கூற வேண்டும் என வும், இரண்டையும் ஒரே வேற்றுமையின் கீழ்க் கூறுவது முறை யல்ல எனவும் கருதுகின்றனர். இந்த வேறுபாட்டைக் குறிக்கும் பொருட்டு மூன்றும் வேற்றுமை[1] எனவும், மூன்றும் வேற் றுமை[2] எனவும் இங்குக் காட்டப்பட்டுள்ளது.

தமிழில் நிகழ்காலம், எதிர்காலம் என்ற பாகுபாடு தெளிவாகக் குறிக்கப்படவில்லை என்று மொழி இயல் அறிஞர்கள் கூறுகின்றனர். கோத்த மொழியில் இறந்தகாலம் (Past), இறவாக்காலம் (Non-Past) என்ற இரு காலங்களே காணப்படுகின்றன.




எ. கா:—

இறந்தகாலம்—வந்தேன்    இறந்தகாலம்—வத்பேன் [Vadpeen]
நிகழ்காலம்—வருகிறேன்    இறவாக்காலம்—வக்வேன் [Vakveen]
எதிர்காலம்—வருவேன்

பழந்தமிழில் [4]இ, [4]த் என்ற இரு இறந்தகால இடைநிலைகள் உண்டு. கோத்த மொழியில் ப், ∅[5] ஆகியவைகள் இறந்தகால இடைநிலையாகும். ஆனால் இந்த ப், ∅, இறந்தகால இடைநிலைகள், தமிழைப் போன்று நேரிடையாக வினையடி (Verb base) யுடன் சேர்வது கிடையாது. கோத்த மொழியில் வினையடியை இரு பகுதிகளாக (Stems) ஒன்று இறந்தகால இடைநிலையின் முன்னரும்; மற்றொன்று இறவாக் கால இடைநிலையின் முன்னரும் வருகின்றன. வினையடிகள் இறந்தகால இடைநிலையின் முன்னர் வரும்போது, ச், த், d, இ ஆகிய நான்கு பகுதி ஆக்கக் கிளவிகளுள் (Stem formatives) ஒன்றைத் தமக்குப் பின்னர் மேற்கொள்கின்றன. இவ்வாறு அமையும் வினைப் பகுதிக்குப் பின்னர், இறந்தகால இடைநிலை சேர்க்கப்படுகிறது.

| | வினையடி | பகுதி ஆக்கக்கிளவி | வினைப்பகுதி | இறந்தகால இடைநிலை |
|---|---|---|---|---|
| 1 | ஓட் | ச் | ஓச்- | -ப்-/-∅- |
| 2 | ஆர் | த் | ஆத்(த்) | -ப்-/-∅- |
| 3 | தின் | d | திற்ற் | -ப்-/-∅- |
| 4 | தூக் | இ/(ஈ) | தூகி [தூகீ] | -ப்-/∅- |

4. இ—எனும் இடைநிலை இன், ன் என்ற இடைநிலைகளை மாற்றுருபன்களாகக் (allomorphs) கொண்டுள்ளது. எ. கா:— போனான்; பாடினான்.

த்—எனும் இடைநிலை ட், ந்த், த்த், என்ற இடைநிலைகளை மாற்றுருபன்களாகக் கொண்டுள்ளது. எ. கா:- கேட்டாள், வந்தாய், கொடுத்தான்.

5. ∅—இக்குறியீடு வெறுமையை (Zero)க் குறிக்கிறது. அதாவது இக்குறியீடு பூஜ்யத்திற்குச் சமமாகும்.

க், க்வ் எனும் இடைநிலைகள் கோத்த மொழியில் இறவாக்கால இடைநிலைகளாகும். கிறு, கின்று என்பன நிகழ்கால இடைநிலைகளாகவும், ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகளாகவும் தமிழில் வழங்கப் படுகின்றன.

தமிழும் கோத்த மொழியும் வினைமுற்று அமைப்பில் ஒன்றிக் காணப்படுகின்றன. கோத்த மொழியில் படர்க்கை[6] வினைமுற்றின்கண் பால் வேறுபாடுகள் காணப்படவில்லை. 'கோ' எனும் விகுதி ஒன்றே ஐம்பால் வினைமுற்றின்கண் அமைந்து காணப்படுகின்றது.

| இடப்பெயர் | தமிழ் ஒருமை | தமிழ் பன்மை | கோத்தம் ஒருமை | கோத்தம் பன்மை |
|---|---|---|---|---|
| தன்மை | என் | ஓம் | ஏன் | ஏம் (உளப்படாப் பன்மை<br>ஓம் (உளப்படு பன்மை) |
| முன்னிலை | ஆய் | ஈர்/ஈர்கள் | ஈ | ஈம் |
| படர்க்கை ஆண்பால் | அன்/ஆன் | — | | |
| படர்க்கை பெண்பால் | அள்/ஆள் | — | | |
| படர்க்கை பலர்பால் | — | அர்/ஆர் | கோ | கோ |
| படர்க்கை ஒன்றன்பால் | அது | — | | |
| படர்க்கை பலவின்பால் | — | அன | | |

எ. கா:— இறந்தகாலம்.—

தன்மை ஒருமை: பாச்பேன்; ஆத்(த்)பேன்; திற்ற்பேன்; தூகிபேன்
தன்மைப் பன்மை: பாச்பேம்; ஆத்(த்)பேம்; திற்ற்பேம்; தூகிபேம்
,, பன்மை: பாச்போம்; ஆத்(த்)போம்; திற்ற்போம்; தூகிபோம்
முன்னிலை ஒருமை: பாச்பீ; ஆத்(த்)பூ; திற்ற்பீ; தூகிபீ.
,, பன்மை: பாச்பீம்; ஆத்(த்)பீம்; திற்ற்பீம்; தூகிபீம்.
படர்க்கை
ஒருமை/பன்மை: பாச்ஒகோ; ஆத்(த்)ஒகோ; திஏ்ற்டுகோ, தூக்டுகோ

'ஆ' எனும் எதிர்மறை இடைநிலை இவ்விரு மொழிகளிலும் உண்டு. எதிர்மறை 'ஆத்' எனும் இடைநிலையாலும் இருமொழிகளிலும் குறிக்

6. படர்க்கை தான்; தாம் என்பதோடு, சுட்டுப் பெயர்களையும், வினாச்சுட்டுப் பெயர்களையும் இங்குக் குறித்து நிற்கும்.

கப்படுகிறது. இந்த 'ஆத்' எதிர்மறையை "எதிர்மறை ஏவல்" (Negative Imperative) என்று கூறுவர்.

எ—கா:-

**தமிழ்:—** அவன் வேலை செய்யான்.

**கோத்தம்:—** அவ்ன் கெக்கெயா (ய்) கோ.

**தமிழ்:—** நீ அஞ்சாதி (கலி : 84),

**கோத்தம்:—** நீ அன்ஜாதி.

'கூடாது' எனும் எதிர்மறை போன்று 'கோலா' எனும் எதிர் மறை கோத்த மோழியில் உண்டு.

எ—கா:-

**தமிழ்:—** போகக்கூடாது.

**கோத்தம்:—** ஒகோலா.

கோத்த மொழியில் 'அலா'; 'இலா' எனும் எதிர்மறைகளும் உண்டு. 'அலா' எனும் எதிர்மறைப் பெயரை அடுத்தும்; 'இலா' எனும் எதிர்மறை வினையை அடுத்தும் கோத்தமோழியில் வழங்கப்படுகின் றன[3].

**கோத்தம்:—** அவ்ன் கெய்ல் இலா "அவன் செய்யவில்லை".
அத் பய் அலா "அது வீடு அல்ல".

தமிழிலும் கோத்த மொழியிலும் இயல்பாக அமைந்த செயப்படு பொருள் குன்றிய வினை (Intransitive), செயப்படு பொருள் குன்றா வினை (Transitive) காணப்படுகின்றன. இவை தவிரச் செயப்படு பொருள் குன்றிய வினைகளை அடிப்படையாகக் கொண்டு செயப்படு பொருள் குன்றா வினைகளை அமைத்துக்கொள்ளும் பான்மை இருமொழி களிலும் காணப்படுகின்றது. வினையடியின்கண் அமைந்துள்ள மெல் லின வல்லின மெய்த் தொடரை (Nasal-Stop sequence) வல்லின மெல்லின மெய்த் தொடராக (Stop–Stop sequence) மாற்றுவதன் மூலம் இரு மொழிகளிலும் செயப்படு பொருள்குன்றா வினை அமைத்துக் கொள்ளப்படுகிறது.

| மொழி | செயப்படு பொருள் குன்றிய வினை | செயப்படு பொருள் குன்றா வினை |
|---|---|---|
| தமிழ் | அழுங்கு | அமுக்கு |
| ,, | கலங்கு | கலக்கு |
| ,, | நீங்கு | நீக்கு |

3. கோ. சுப்பையா — "கோத்த மொழியில் எதிர்மறை அமைப்பு".

தமிழில் வினை முற்றின்கண் அமைந்துள்ள — ந்த் — எனும் கால இடைநிலையை — த்த் — என்ற கால இடைநிலையாக மாற்றுவதன் மூலம் செயப்படு பொருள் குன்றா வினை பெறப்படுகிறது.

எ—கா:-

தமிழ்:— அசைந்தான் → அசைத்தான்.
அழிந்தான் → அழித்தான்.
மீண்டான் → மீட்டான்.
சாய்ந்தான் → சாய்த்தான்.

கோத்த மொழியில் இவ்வாறு அமையும் செயப்படு பொருள்குன்றா வினைகள் தெளிவாகப் புலப்படவில்லை. இது மேலும் ஆய்வுக்குரியதாகும். ஆனால் வினைப் பகுதியின் ஈற்றில் உள்ள ஒலிப்பொலி (Voiced Stop)யை ஒலிப்பிலா ஒலி (Voiceless Stop) யாக மாற்றுவதன் மூலம் கோத்த மொழியில் செயப்படு பொருள் குன்றா வினை அமைத்துக்கொள்ளப்படுகிறது. இந்நிலை தமிழில் காணப்படவில்லை.

எ—கா:-

கோத்தம்:— * amg → amk
Kalg → Kalk
Camd → Camt

உதவிய நூல்கள்:-

**M. Andronov** — A Standard Grammar of Modern and Classical Tamil, New Century Book House; Madras, 1969. PP ; 132—142.

**R Caldwell** — A Comparative Grammar of the South Dravidian family of Languages, University of Madras, 1961.

**M. B. Emeneau** — The South Dravidian Languages, Journal of American Oriental Society, Vol. 87, No. 4· Oct.—Dec. '67,

**G. Subbiah** — Field notes on Kota.
Personal Pronouns of Kota (Forth Coming).

இக்கட்டுரையை எழுதுவதற்குப் பெரிதும் துணைபுரிந்த நண்பர் திரு. ஆர். கோதண்டராமன் அவர்களுக்கு நன்றியுடையேன் ஆவேன்.

---

* தமிழில் ஒலிப்பொலிக்கும், ஒலிப்பிலா ஒலிக்கும் வேறுபாடு காட்டுவதற்கு வரிவடிவம் இல்லாததால், இங்கு ஆங்கில வரிவடிவம் தெளிவாகத்தெரியும் பொருட்டும், வேறுபாடு காட்டும் பொருட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# உரை எழுதுவது ஒரு தொழிலா ?

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,
பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

நீதிபதி ஒருவருடன் உரையாடுகையில், ஓய்வுபெற்றுக்கொண்ட நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள் என்று என்னைக் கேட்க, அவர்க்கு நான் "ஓய்வுகொள்ளுகிறேன்" என்றேன். உடனிருந்த நண்பர்கள் கல்லென்று சிரித்தனர். "இல்லை; ஏதாகிலும் ஒரு வேலை செய்தல் வேண்டுமே; உடல் நலத்துக்கு அது மிகவும் வேண்டுவதொன்றாயிற்றே என்று கேட்டேன்" என்றார். 'பொள்ளாச்சி வள்ளல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் விரும்பிய வண்ணம் திருவருட்பாவுக்கு உரை யெழுதுகின்றேன்'' என்று விடை கூறினேன். நூலுக்கு உரை எழுதுவது ஒரு வேலையாகுமா? வேலை என்றால் செய்பவருடைய தனித்தன்மையை (Individuality) வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்; நூலாசிரியர் வெளியிட்ட கருத்துக்களை, அவற்றை மூடியிருக்கும் அரிய சொற்களை நீக்கி, எளிய சொற்களால் உரைப்பது தானே உரை; அதனை எழுதுவது ஒரு வேலையாக எப்படிக் கருதுவது என்றார் அவர்; நிலைமை அதுவாயின் நீதிமன்றத்தில் வழக்காடச் செல்லும் மக்கள் பொருட்டு நீதிபதிக்கு வழக்கெடுத்து உரைக்கும் வழக்கறிஞர்கள் செய்வது வேலையாகுமா? அதுவும் உரைகாரர் உரை வேலை போல்வது தானே; அது சிறந்த வேலையாகப் பொருள் பயந்து மக்களை உயர்த்தியிருக்கிறது அல்லவா? நீங்களும் அக்கூட்டத்தில் வளர்ந்து வந்தவர் தானே? என்றேனாக, மேற்கொண்டு தொடர்ந்து பேச்சிடையே உரையாசிரியரது உரை மரபு விரிவாக நினைக்கப்பட்டது; அங்குப் பரிமேலழகர் உரை சிறப்பிடம்பெற்றது. அவரது உரைநலம் இக்கட்டுரையின் பொருள்.

நமது தமிழ் மொழிக்குப் பெருமை தருகின்ற நூல்களில் தொல்காப்பியம், திருக்குறள் என்ற இரண்டு நூல்களும் தலைசிறந்தனவாகும். அவற்றுள் தொல்காப்பியம் எழுத்தும், சொல்லும், பொருளுமாகிய மூவகை நெறியில் தமிழருடைய எழுத்தும், சொல்லும், உணர்வும், ஒழுக்கமும், வாழ்வும், பண்பாடும், பிறவும் உரைக்கின்றது. திருக்குறள் தமிழரிடை நிலவிய அறமும், பொருளும், இன்பமுமாகிய நினைவும், சொல்லும் செயலுமாகிய கூறுகளைக் குறட்பாக்களால் உரைக்கின்றது. அதற்கு உரைகண்ட ஆசிரியர் பலர். அவர்களில் நுண்மாண்

நுழைபுலச் செல்வராய், தமிழ் மரபோடு வட நூல் மரபும் நன்குணர்ந்த் தமிழ்ச் சான்றோராய் விளங்கியவர் பரிமேலழகர். அவர் திருக்குறளுக்கு எழுதியுள்ள உரை தனிப்பெரும் நூலாகப் பயிலத்தக்க பண்பு அமைந்தது. தமிழில் மேன்மையான நூல்கள் எனச் சிலவற்றை நானூறு ஐந்நூறு ஆண்டுகட்குமுன் ஒரு பெரியவர் ஆராய்ந்து தொகுத்துக் கூறினார். அவர் யின்னார் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆயினும், அவர் உரைத்தது வெண்பா வடிவில் இருக்கிறது.

> "வள்ளுவர்மெய் யன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை—ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாம் தரம்"

என்பது அவ்வெண்பா. இவ்வெண்பாவை நோக்குமின்; திருக்குறள், தொல்காப்பியத் தொண்டர் புராணம் எனப் பல நூற்களைத் தொகுத்த அந்தப் பெரியவர், அவற்றிற்கு ஒப்பாகப் பரிமேலழகர் உரையையும் நிறுத்தி உரைப்பது, பரிமேலழகர் உரைக்குப் பழங்காலப் புலவர் பெருமக்கள் எத்தகைய மதிப்பு வைத்திருந்தனர் என்று நமக்கு அறிவிக்கின்றது.

மேலும் பரிமேலழகர் சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடலுக்கும் உரை எழுதியிருக்கிறார், என்றாலும் அது திருக்குறள் உரைபோல வளமும், வனப்பும், திட்பமும், நுட்பமும் செறிந்தில்லை. அதனால் அந்த உரை பரிமேலழகர் உரைதானோ? என்று ஐயுறுவாரும் உண்டு. நிலைமை இப்படி இருப்பதால்தான், பரிமேலழகர் உரை என்றால் யாவரும் திருக்குறள் உரை ஒன்றையே நினைக்கிறார்கள் - இந்த வெண்பாவில் "தெள்ளு பரிமேலழகர் செய்த உரை" என்பது திருக்குறளுக்கு அவர் எழுதிய உரையையே என்று பலரும் சொல்கிறார்கள். இத்தகைய சிறப்போடு விளங்குவதால்தான் பரிமேலழகர் உரையின் அழகு காண்பதில் அறிஞர்களுக்குப் பெரும் விருப்பம் உண்டாயிற்று.

அதனை நோக்குவோம். 'செவிக் குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்பது ஒரு திருக்குறள். செவிக் குணவாகிய நல்ல அறிவுடைக் கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்பில்லாதபோது வயிற்றுக்கு உணவு தரவேண்டும் என்பது இதன் பொருள். இதற்குப் பரிமேலழகர் செவிக்குணவாகிய கேள்வியில்லாதபொழுது வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும் என்று உரை கூறுகின்றார்.

இனி இந்த உரையிற் கருத்தைப் புகுத்திப் பரிமேலழகர் அழகு
செய்வதைக் காண்போம். திருவள்ளுவர் செவிக்குணவு என்பது
எதனை? செவிக்குணவாவது கேள்வி என்று சொல்லுகிறார் திருவள்ளு
வர். செவிக்குணவு இல்லாதபோது வயிற்றுக்குத் தரப்படும் என்றால்
செவிக்குணவு இருக்கும்போது வயிற்றுக்கு உணவு தரப்படாது
என்று தெரிகிறது. உணவு எனப்படுவதால் செவிக்குணவு போல
வயிற்றுணவும் யாவருக்கும் வேண்டத்தக்கது. செவிக்குணவு தந்து
கொண்டே வயிற்றுணவு கொண்டாலென்ன எனின், வயிற்றுணவி
னும் செவிக்குணவு சுவை மிகுந்தது. ஆகையால் இரண்டையும் சம
மாக்குவதற்குப் பரிமேலழகருக்கு விருப்பம் இல்லை. அவர் வயிற்
றுணவைவிட, செவி உணவு சிறந்தது என்பாராய் "சுவை மிகுதியும்
பிற் பயத்தலுமுடையது கேள்வி. அது உள்ள பொழுது வயிற்றுணவு
அறிஞர்களால் விரும்பப்படாது ஒழிகிறது என்று பரிமேலழகர் கண்டு,
இதனால்தான் திருவள்ளுவர் செவிக்குணவு இல்லாதபோது வயிற்
றுக்கு உணவு தரப்படும் என்றார். இனி, செவிக்குணவு இல்லாத
போது தரப்படும் வயிற்றுணவையும் "சிறிது" ஈயப்படும் என்பது எவ்
வாறு பொருந்தும் என்று ஒரு கேள்வியை மாணவன் பரிமேலழகரிடம்
கேட்கிறான். அதற்கு விடை கூறும் பரிமேலழகர் வயிற்றுணவு மிகுமா
னால் இடையூறு உண்டாகும் என்று நினைக்கிறார். ஆகவே அவர்
வயிற்றுணவு பெரியதாயவழி—வயிற்றுணவு மிகுமானால்—அது
நோயும், காமமும் விளைவித்தலின் திருவள்ளுவர் "சிறிது" என்று போடு
வதுதான் பொருத்தம் என்று பரிமேலழகர் கூறுகிறார். இது கேட்ட
மாணவன், "சிறிது" என்பது ஏன்? சிறிதும் இல்லையானால் நோய்
முதலியன குறையும் அல்லவா?" என்று வினவுகிறான். அவனுக்குப்
பரிமேலழகர் விளக்கம் தருகிறார். "அது தானும் பின்னிருந்து கேட்
டற் பொருட்டு" என்று சொல்கிறார். பின்னிருந்து கேட்டற்பொருட்டு
என்பதாயின், அவ்வாறு கேட்பதற்குரிய வலிமையும், தெளிவும் தரு
வது வயிறு. அவ்வயிற்றிற்குத் தருகின்ற உணவை இழிந்தோர்க்குச்
சொல்வது போல "ஈயப்படும்" என்று சொல்வது பொருத்தமா? என
மாணவன் கேள்வி கேட்கிறான். இக்கேள்வியை நினைத்துப் பார்த்த
பரிமேலழகர் அது பொருத்தம்தான் என்பராய் "ஈதல் வயிற்றது இழிவு
தோன்ற" நின்றது என்று கூறுகிறார். அது எவ்வாறு பொருந்தும்
என்றால், உணவு மிகுமானால் வயிறு காமமும், நோயும் உண்டுபண்ணு
வதால்தான் "ஈயப்படும்' என்று சொல்லுதல் பொருந்தும் என்கிறார்.

இவ்வாறு ஒவ்வொரு குறட்பாவுக்கும் அழகொழுகத் தருக்க நெறி
யில் உரை எழுதும் பரிமேலழகர் கி. பி 13-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபு

ரத்தைச் சூழவுள்ள நாட்டில் வாழ்ந்தவர். அவர் காலத்தில் மூன்றும் இராசராசனும், மூன்றும் இராசேந்திரனும் சோழ நாட்டை ஆண்டனர். திக்கன் என்ற விசயகண்டகோபாலன் காஞ்சிபுரப் பகுதியில் நாடு காவல்புரிந்தான். அந்நாளில் வாழ்ந்தவர் பரிமேலழகர், திரிபுவனச் சோழனன ஆனைமேலழகர், (கல். 4:852) நச்சினார்க்கினியர், வண்டுவரைப் பெருமாளான பரிமேலழகர் (கல். 4:854) முதலிய சான்றோரின் தூய தமிழ்ப் பெயர்கள் பின்னாளில் மறைந்து வீழ்ந்தன. அவ்வீழ்ச்சி நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஊர்கள் சதுர்வேதிமங்கலங்களாக மாறி, பின்னர் அனைத்தும் மறைந்த வரலாற்றோடு ஒத்த தனி வரலாறு ஆகும்.

இப்பரிமேலழகர் திருக்குறட்கு எழுதியுள்ள உரை மிகவும் சிறந்ததெனத் தமிழறிஞர் அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டுகின்றார்கள். பரிமேலழகருக்கு முன்னும் பின்னும் தமிழ்ப் புலவர்கள் தோன்றித் திருக்குறட்கு உரை கண்டாரேனும், பொதுவகையில் நோக்கினால் பரிமேலழகர் உரைத்த உரைக்கு ஒப்பாகவோ உயர்வாகவோ உரை எழுதினோர் இல்லை என்று கூறுவது மரபு. இதனை வற்புறுத்துவது போல, "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ—நூலில் பரித்தவுரை எல்லாம் பரிமேலழகன், தெரித்தவுரையாமோ தெளி" என்றொரு பழம்பாட்டு நாட்டில் நிலவுகிறது. அன்றியும், பரிமேலழகர் உரையைத் தழுவியும், ஒற்றியும் எழுதின உரைகளை அறிஞர்கள் மேற்கொண்டதோடு, வேறுபட்டும் மாறுபட்டும் செய்த உரைகளை ஏலாது ஒழிந்தமையே ஒரு சான்றாகும்.

பழந்தமிழ் நூல்கட்கு உரை காண்பது படிப்பிப்போர், நூல்களைப் பிறர் படித்துப் பொருள் விளங்கிக்கொள்ளுமாறு செய்யும் செயல் வகையுள் ஒன்று. அருஞ் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பொருள் உரைத்தலும், அவற்றிற்குப் பொழிப்புரைத்தலும் ஒரு வகை. அவற்றுள் முதல் வகையை அரும்பதவுரை என்றும், கண்ணழித்துரை என்றும், பதவுரை என்றும், பின்னதைப் பொழிப்புரை என்றும் கூறுவர். உரைக்கப்பட்ட உரையின்கண் அடங்கிய கருத்துக்களை வினா விடை வாயிலாக விளக்கி நூலாசிரியர் உள்ளக்கிடையை அறிவாராய்ச்சி நெறியில் தெளிய உரைத்தலும் ஒரு வகை. இன்றுள்ள தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கட்கும் இலக்கியங்கட்கும் உரைகாரர் தோன்றி, உரையெழுதியது சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு உள்ளே தான் என்று கூறல் வேண்டும். அதற்கு முன்னே நிலவிய உரைகளைப்

பற்றி ஒன்றும் அறிய முடிய்வில்லை. எனினும், இறையனர் களவிய லுக்கு நக்கீரர் கண்ட வுரை பழமை வாய்ந்தது. அதனையும் தொல் காப்பியம், திருக்குறள் முதலிய நூல் உரைகளையும் ஒப்பவைத்து நோக்கும்போது, உரைகாரர் வழிவழியாக மேற்கொண்டிருந்த மரபு ஒன்று வெளிப்படுகிறது. எடுத்தோத்து, இலேசு, உத்தி என்ற மூன்று நெறிகளால் மேற்கொண்ட இலக்கண இலக்கியங்கட்கு உரை காண் பது அம்மரபு. அம்மரபு, பிற்கால நூல்களான நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல் உரைகளில் மேற்கொள்ளப் பெற்றிருக்கிறதேயன்றி, இலக்கியங்கட்கு எழுதிய உரைகளில் தெளி வாகக் காணப்படுவதில்லை. பழைய உரை முறையை மறவாது கடைப் பிடித்ததொன்றே பரிமேலழகர்க்குத் தனிச் சிறப்பையும், அவர் உரைக்கு அழகையும் தருகிறது.

எடுத்தோத்து, இலேசு, உத்தி என்ற மூன்றனும் பொருள்காணும் மரபு, நூலாசிரியன் உள்ளக் கருத்தை ஆழ அகந்து கண்டு, அறிவுநெறி யால் ஆராய்ந்து உரைக்கும் மாண்பும், அருமையும் அமைந்ததாகும். மேற்போக்காக நுனிப்புல் மேயும் விலங்கு நோக்கம் இந்நாளில் வேற்று மொழிப் பயிற்சியால் மக்களிடையே பெரிதும் பரவி இருக்கிறது. அன் றியும் கல்வியின் நோக்கம், அறிவும், ஒழுக்கமும் பெறுவது என்பதைக் கைவிட்டு, ஏலாதன செய்தேனும் வயிறு வளர்ப்பது என்பது கொள் கையாக மாறியதனல் இவ்விழிநிலை உண்டாயிற்று. இக்கருத்துடை யாரே வழிவழியாக வாழ்வியல் தலைவர்களாக வந்தமையால், இந் நிலைமை மேன்மேலும் ஆதரவுபெற்று வளர்ந்துவருகிறது. நூலாசிரி யர் கூறும் கருத்துக்களை, 'ஏன்? எப்படி?' என எழும் வின விடை களால் நுண்ணறிவு கொண்டு தூய்மை செய்துகொள்வது உயர்நிலை மாணவர் கல்வி முறையிலேயே கைவிடப்பட்டுள்ளது. அதனல் கல்வி பயில்வோரிடையே காரண, காரிய முறையில் ஆராய்ந்து உண்மை காணும் பயிற்சி தேய்ந்துபோயிற்று. பரிமேலழகர் ஒருவரே அதனை ஓரளவு விடாது கடைப்பிடித்து உண்மை உரை காண்பதில் பெரிதும் முயன்று வெற்றிபெற்றுள்ளார். எனினும் அவர் வேற்றுமொழி மர பும், தமிழ் மரபும் வேறு வேறு இயல்பின என உணர்த்தும், வாதனை வயத்தால் சில பல குறட்பாக்களில் குழறுபடை செய்து குற்றப்படு கிறர். ஆனலும், அதுபற்றி அவரது உரை மாண்பும் அழகும் குன்று வதில்லை.

எடுத்தோத்து என்பது எடுத்து ஓதப்படும் பாட்டும் அதன் கருத் துமாகும் இதனை எடுத்துரை என்பதும் வழக்கம். பொறுப்பவர்க்

குப் புகழுண்டாகும்; பொறுத்து ஒழுப்பவர்க்கு ஒரு நாளை இன்பமேயாம் என்ற கருத்தை,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்ற குறட்பா எடுத்துரைக்கின்றது அதனால் இது எடுத்தோத்து அல்லது எடுத்துரை ஆகும். இங்ஙனம் எடுத்தோதப்படும் உரையில் "ஒரு நாளை இன்பம்" என்பதும் "பொன்றுந் துணையும் புகழ்" என்பதும் விளக்கப்பட வேண்டுவன. அதனை விளக்கும் பரிமேலழகர், "ஒரு நாளை இன்பம், அந்நாள் ஒன்றினும் கருதியது முடித்தேம் எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம்" என்று கூறுகிறார். "பொன்றுந் துணையும் புகழ்" என்பதில் பொன்றுதல் இறத்தல், பொறுத்தார்க்கு இறக்கும் துணையும் புகழ் என்பது கருத்தாய்ப் பொருள் குற்றமாகிறது. புகழ் நிற்குமிடம் உலகமே தவிர,புகழைச் செய்பவரல்ல: அவர் இறந்து போனாலும் புகழ் இறந்துபோவதில்லை. இதனை விளக்குதற்குப் பரிமேலழகர் ஒரு சூழ்ச்சி செய்கிறார். புகழ்க்கு ஆதாரம் உலகம் என்று காட்டி, "ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடைய 'உலகம்' என்னும் சொல் வருவித்துரைக்கப்பட்டது" என உரைத்து, "பொறுத்தார்க்கு உலகம் அழியும் வரைப் புகழ் நிற்கும்" எனக் குறட்பாவின் எடுத்துரையை விளக்கம் செய்கிறார். எடுத்துரை, விதியும் விலக்குமென இரண்டாகப் பிரிந்து, பொதுவும் சிறப்பும் என வகைப்பட்டு, எய்தாதது எய்துவிப்பது, எய்தியது விலக்குவது, எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுவது, எய்தியது விலக்கிப் பிறிது வகுப்பது, எய்தியது இகந்துபடாமைக் காப்பது எனப் பல கூறுகளாக விரிந்து செல்வது. "விதியெல்லாம் எய்தாததனை எய்துவிப்பதும், ஒருகால் எய்தி ஒருகால் எய்தாதாகற்பாலதனை அவ்வழியும் இகந்து படாமற் காத்து நியயமாக எய்துவிப்பதும், ஈரிடத்து எய்தற்பாலதனை ஒரு மருங்கு மறுப்பதும் என மூவகைப்படும்" என மாதவச் சிவஞான முனிவர் முதலாயினோர் கூறுவர். அவற்றைக் கருத்திற்கொண்டுரைப்பது—உரை காண்பது—உரைகாரர் மரபு; ஆயினும் அவற்றை விரித்துரைப்பதற்கு இங்கு இடம் இல்லை.

இலேசு என்பது எடுத்துரைக்கும் கூற்றில் வேண்டாத சொற்களைப் பெய்தலும், வேண்டுவதைத் தொகவைத்தலும், முறை பிறழ்ந்து உரைத்தலும் எனப் பலதிறமாக வரும். அவற்றால் பாட்டைப் பாடும் புலவற்கு உள்ளத்தில் ஒரு குறிப்பு உண்டு; அது ஆராய்ந்து காணத் தக்கது என்பது இலேசின் குறிக்கோள்.

"ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

என்ற குறட்பா நல்லொழுக்க முடையவர்க்குத் தீய சொற்களைச் சொல்வதென்பது ஆகாத ஒன்று என உரைக்கின்றது. தீய சொற்களைச் சொல்வதைத் "தீய வாயாற் சொலல்" எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். "தீய சொலல்" என்றாலே தீய சொற்களை வாயினாற் சொல்லுதல் என்று பொருள்பட நிற்பதால், "வாய்" என்ற சொல் இலேசு. இந்த இலேசினால் திருவள்ளுவருடைய உள்ளக் குறிப்பு யாது? எனக் காணலுற்று "வாயாற் சொலல்" என்றல் ஏன்? எனக் கடாவிக்கொண்டு 'வாய் என வேண்டாது கூறினார், நல்ல சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு" என உரைக்கின்றார். இலேசினால் பொருள்கொள்ளப்படும் இம்முறை வடமொழியிலும் உண்டு என அறிவிக்க, இதனை "வட நூலார்" 'தாற்பரியம்' என்று கூறுவர் எனப் பரிமேலழகர் உரைக்கின்றார்.

உத்தி என்பது நூல் உரைக்கும் ஆசிரியன் கைக்கொள்ளும் அறிவு நெறி. அறிவுப் பெருக்கத்துக்கும் நுண்மைக்கும் ஏற்ப அது விரிந்து செல்லும் என்று இலக்கணப் புலவர் இயம்புவர். ஊழ் என்ற பகுதியில்,

"நல்லவை யெல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு"

என்ற குறட்பா வருகிறது. இதனைக் கிடந்தபடியே கொள்ளின் செல்வம் பெற முயல்பவர்க்கு நல்லவை தீயவையாம், தீயவை நல்லவையாகும் என்று பொருள்பட்டுத் தெளிவில்லாமல் கெடுகிறது. இது எடுத்தோத்து இலேசு என்ற இரண்டாலும் விளக்கம் பெறாமல் உத்தியை நாடி நிற்கிறது. "அதிகாரமுறை" என்ற உத்தியால், தீயூழ் வயப்பட்டார் செல்வம் செய்யுங்கால் நல்லவை யெல்லாம் தீமையாய் முடியும்; நல்லூழ் உற்ற போதில், தீயவை செயினும் நல்லவையாய்ச் செல்வம் எய்துவிக்கும் என உரை செய்யப்படுகிறது.

இவ்வாறு எடுத்துரை, இலேசு, உத்தி என்ற நெறிகளில் உத்தி வகை, இலக்கணவமைதி காட்டல், தருக்க நெறியில் விளக்கம் கூறல், வினாக்கட்கு விடை வழங்கல், கருத்துரை தருதல் என வருவன பலவற்றையும் நினைவிற்கொண்டு திருக்குறட்குப் பொருள் விளக்கம் செய்கிறார் பரிமேலழகர்.

"செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று"

என்பது குறட்பா. அதன்கண், 'செய்து ஏமம் சாராச் சிறியவர்" என்ற தொடர் பரிமேலழகரது இலக்கண அறிவை ஈர்க்கின்றது. "ஏமம் சாரா" என்ற தொடர் சிறியவர் என்ற சொல்லோடு இயைவது பொருத்தமா? "புன்கேண்மை" என்ற சொல்லோடு இயைவது பொருத்தமா? என்று ஒரு மயக்கம் உண்டாகிறது. அதை எண்ணிய பரிமேலழகர் "ஏமம் சாராச் சிறியவர்" என்று இயைப்பது உண்டு. அது கூடாது 'சிறியவர் என்பதனைக் கொள்ளின் "செய்து என்பது நின்று வற்றும்" என உரைக்கின்றார். உரை எழுதும் போது இத்தகைய குற்றம் படக் காண்பது முறையாகாது இதைக் கருத்திற் கொண்டு இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார், என்பதொன்றே பரிமேலழகர் நன்கு எண்ணி எழுதுகிறார் என்பது விளங்கும்.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்"

என்பது வேறொரு குறட்பா. இதன்கண் இரண்டு கருத்துக்கள் கூறப் படுகின்றன. ஒன்று வெகுளியை மறத்தல் வேண்டும் என்பது. மற்றொன்று அதனால் தீயவை பிறக்கும் என்பது. இவ்விரண்டிற்கும் ஒரு தொடர்பு காட்டினால் அன்றி, இரண்டும் ஒரு குறட்பாவில் கூறு தற்கு ஆகா. கூறப்பட வேண்டுமாயின் இரண்டிற்கும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும். தொடர்பில்லாத இரண்டு கருத்துக்கள் ஒரு குறட்பாவில் கூறப்படா என்பது உரை மரபு. ஆனால் இரண்டிற்கும் தொடர்பு காணும் போது வெகுளியை மறவாவிடத்துத் தீமை உண்டா கும் என இரண்டிற்கும் காரண-காரியத்தொடர்பு கண்டு, மறத்தல் வெகுளியை என்பதை மேற்கோளாகவும் (பயனாகவும்) தீயவை பிறத் தல் அதனால் வரும் என்பதை ஏதுவாகவும் நிறுத்திப் பரிமேலழகர் பொருள் உரைக்கின்றார். அது அவரது உரைக்கு ஏற்றமும் அழகும் தருகிறது

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்"

எனச் சில குறட்பாக்களைத் திருவள்ளுவர் வினாவடிவில் தருகின்றார். உரைகாரன் அதற்கு விடை கூறவேண்டும். அது உரை மரபு. "பயன்

என்கொல்'' என்பதற்கு விடை கூறும் பரிமேலழகர் ''பயன் இல்லை'' என்று கூறல் வேண்டும். அங்ஙனம் கூறுபவர் ''என்கொல்'' என் பதைப் பற்றிக்கொண்டு, இதன்கண் ''எவன்'' எனும் வினாப் பெயர் ''என்னென்றாய் ஈண்டு (பயன்) இன்மை குறித்து நின்றது'' என்கிறார்.

''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்''

என்ற இக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர் வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் பயன் இல்லை என்றல் வேண்டும். ஆனால் அவர் அதனைச் செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறுவதும் இன்மையின் இரண்டும் ஒக்கும் என்கின்றார். இவ்வாறே,

''உறினட் டறிவினை யொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்''

என்ற திருக்குறள் உரையில் நட்பால் பயனும், பிரிவால் இழப்பது ஒன்றுமில்லை என்று சொல்லவரும் பரிமேலழகர் 'அவர்மாட்டு *நொது மற்றன்மையே அமையும்'' என் உரைக்கின்றார். இனி, திருவள்ளுவர் பொதுவாக உரைக்கின்ற சில கருத்துக்களைத் தெளிவுபட விளக்குவதே உரைகாரர் கடன் என்ற உண்மையைக் கடைப்பிடித்துப் பரிமேலழகர் விளக்குகின்ற திறம் இனிது தோன்றுகிறது.

'யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற''

என்ற குறளில் ''யாம் மெய்யாக் கண்டவை'' எனச் சிலவற்றைப் பொதுவகையாற் கூறுகின்றார் திருவள்ளுவர். அவை யாவை? எனக் கேட்கும் மாணவருக்கு விடை கூறுவது உரையாசிரியர் கடன். இக் கடமையை அறிந்தாற்றுகின்ற பரிமேலழகர், உரையின்கண் 'மெய் யாக் கண்டவை, ஆகமங்கள் என உரைக்கின்றார்'' அது எங்ஙனம் என வினாவிற்கு விளக்கம் எய்தும் பொருட்டு, 'தங்கண் மயக்கமின்மை யின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லாராய்க் காம வெகுளிக ளின்மையின் அவற்றை புணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறை வர், அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற் பொருட்டுக் கூறிய ஆக மங்கள்' என்று தெரிவிக்கின்றார். ஆகமங்களை மெய்ந் நூல்கள் என விளக்கக் கருதும் பரிமேலழகர், ஆகமங்களை உரைத்த ஆசிரியர்களை பொருள்களை உள்ளவாறு உணர வல்லவர் என்றும், உணர்ந்தவற்றை உரைக்க வல்லவர் என்றும் அவரே இறைவர் என்றும் தெரிவிக்

---

* நொதுமல் தன்மை, பகைமையும் நட்புமில்லாத நடுநிலைமை.

கின்றார். ஆகமங்களை அவர் ஏன் எழுதினார் என்பதற்குக் காரணமும் காட்டுகின்றார். உலகத்து மக்கள் மேல் உண்டான அருள் உணர்வால் அவர்கள் உறுதி எய்தும் பொருட்டு இந்த ஆகமங்கள் எழுதப்பட்டன, என விளக்கும் வகையில் "அருளான் உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டு'' என்கிறார்.

இனி, பொய்யாமை, கொல்லாமை ஆகிய இரண்டு அறங்களை வற்புறுத்துகின்ற திருவள்ளுவர்,

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''

என உரைக்கின்றார். இக்குறளைக் கேட்கும் மாணவன் உள்ளத்தில், இரண்டறத்துள்ளும் யாது சிறந்தது என்ற ஐயம் எழுகிறது. திருவள்ளுவரே முதன்மையைக் கொல்லாமைக்குவைத்து அதற்குப்பின் பொய்யாமையை வைத்து உரைக்கின்றார் என்று சொல்வது ஒருவாற்றால் விடையாகும் அதன்கண், காரணம் காட்டப்படாமையால், காரண, காரிய முறையில்வைத்து உரைப்பது உரைகாரர் கடமையாகிறது. அதனால் பரிமேலழகர் "பொய்யாமை பொய்யாமை யாற்றின்'' எனவும், "யாமெய்யாக் கண்டவற்றுளில்லை'' யெனவும் கூறினாராகலின், இரண்டறத்துள்ளும் (கொல்லாமை, பொய்யாமை) யாது சிறந்ததென்று ஐயம் நிகழுமன்றே, அது நிகழாமைப் பொருட்டு ஈண்டு "அதன் பின் சாரப் பொய்யாமை நன்றென்றார்; முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின்'', அதனைப் 'பின்சார நன்றென்றது'', நன்மை பயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற, அது திரிந்து வருதலாலென உணர்க'' என எழுதுகிறார். இதனை இந்நாளைய சிறந்த இலக்கிய விமர்சகர்கள் (Advanced Literary Critico) Logical interpretation with psychological sequence என்று கூறுகின்றார்கள்.

இனி "மெய்யுணர்தல்'' என்ற பகுதியில் மெய்ப் பொருளுக்குச் செம்பொருள் என்ற பெயர் குறித்து,

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். "செம்பொருள்'' என்பதை விளக்க வந்த பரிமேலழகர் தோற்றங் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை யொன்றும் கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லாவற்றிலும் கலந்து நிற்கிற முதற்பொருள் விகாரமின்றி

எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைச் செம்பொருள் என்றார் என உரைக்கின்றார். இது ஒரு சமய சாத்திரம் படிக்கின்றோமோ என நம்மை மருட்டி இன்பம் செய்கிறது. இனி,

> "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
> தீமை யிலாத சொலல்"

என்ற குறட்பா உரையில், "எனப்படுவது" என்பதற்கு 'என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" எனப் பொருள் கூறுகின்றார் பரிமேலழகர், "எனப்படுவது" என்பதற்கு, 'என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" என்று பொருள் கூறுதல் பொருத்தமா? என்று வினா எழுப்பிய மாணவனுக்கு விடை கூறுகிறார் பரிமேலழகர். வழக்கில் ஊர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் உறையூரை எடுத்துக் காட்டி, "ஊரெனப்படுவது உறையூர்" என்றாற் போல என உரைக்கின்றார். நூல் உரை காண்பவர் இலக்கணத்தையோ, வேறு நூற்களையோ காட்டாமல் வழக்கினை எடுத்துக் காட்டுவது முறையாகுமா? எனின்,

> "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாகலான"

என்று தொல்காப்பியம் வழக்கினைக் காட்டுவது நேரிது எனக் காரணத்தோடு கட்டுரைக்கின்றது. ஆகையால் 'என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" என்று வழங்குதல் பொருத்தமே என உய்த்துணர வைக்கின்றார் பரிமேலழகர்.

ஒரு தலைவரின் கீழ்ப் பணிபுரிபவன் தன்னை அவர் ஐயுறத்தக்க வகையில் நடத்து கொள்ளக் கூடாது; ஐயம் பிறந்து விடுமானால், பிறகு தெளிவித்தல் ஒருகாலும் ஆகாது என்ற கருத்துப்பட,

> "போற்றின் அறியவை போற்றல் கடுத்தபின்
> தேற்றுதல் யார்க்கும் அரிது"

என்று திருவள்ளுவர் கூறுகிறார், "கடுத்தபின் (ஐயம் தோன்றிய பின்) தேற்றுதல் யார்க்கும் அரிது" என்பது எவ்வாறு பொருந்தும் என மாணவன் கேட்கிறான். இவ்வாறு ஐயம் தெளிவுபெற வேண்டுங்கால் உரைகாரர்கள் இலக்கணம், வழக்கு, ஏது, எடுத்துக்காட்டு, என்ற நான்காலும் விளக்கம் செய்வர். இங்கே நான்கனுள் இதனை எடுத்துக் காட்டால் விளக்கம் செய்கின்றார் பரிமேலழகர். 'கடன் கொண்டான்

தோன்றப், பொருள் தோன்றுமாறு போலக் கண்டுழியெல்லாம் நினைக் கப்படுதலின் தேற்றுதல் யார்க்கும் அரிது' என எடுத்துக் காட்டினுல் உரைக்கின்ருர்.

பரிமேலழகரது உரையிற் காணப்படும் பல்வேறு அழகுகளில் அரிய சொல்முடிவு காட்டி இலக்கண அமைதி கூறுவது ஒன்று "கவ்வையாற்கவ்விது காமம்" என்ற குறட்பாவில் "கவ்விது" என்பது கவ்வையென்னும் சொல் அடியாகவந்தது; ஆனுல் அங்ஙனம் வருதற் குத் தமிழ் இலக்கணத்தில் இடமில்லை; செய்யுளினும் வழக்கு வலி யுடைத்து என்பது பற்றி, "செவ்வையுடையதனைச் செவ்விது என்ருற் போலக் கவ்வையுடையதனைக் கவ்விது என்ருர்" 'என்று பரிமேலழகர் உரைப்பது இலக்கணப் புலவர்க்கு வியப்பும் இன்பமும் தருகிறது. காரணம் என்ன எனின் செவ்வை உடையதனைச் செவ்விது என்றல் தொல்காப்பியர் மரபு. எவ்வயற்‌பெயரும் வேளிப்படத் தோன்றி, அவ் வியல் நிலையல் செவ்விது என்ப, என்பது தொல்காப்பியம். அதை நினை விற்கொண்டு பரிமேலழகர் "செவ்விது" என்ருற் போல என உரைக் கின்ருர். இவ்வாறே ஒரு குறட்பாவில் "புலப்பாயாக" என்பது "புலத்தி" என்று வராமல் "புலத்தை" என வருகிறது. அவ்வாறு வருதற்குச் சொல்லியல் காண்கின்ற பரிமேலழகர், தமிழ் மரபு காணுது புதியதொரு சூழ்ச்சி செய்கின்ருர். புலத்தை என்பதன் ஈற்றெழுத் தைப் பிரித்து விகுதி என்று பெயரிட்டு, அதற்கு மேற்கோளாகக் கலித் தொகைப் பாட்டில் ஒன்றைப் பற்றிக் கொண்டு "புலத்தை என்புழி ஐகாரம், 'கடம்பூண்டு ஒருகால் நீவந்தை' என்புழிப் போல முன்னிலை வினை விகுதி" என உரைக்கின்ருர்: விகுதியென்று நிறுத்தி இலக்கணம் காண்பது தொல்காப்பியர் காலத்திலோ, வள்ளுவர் காலத்திலோ மரபன்று. பரிமேலழகரே மேற்கொண்டுரைப்பது புது மரபு; பல்லவர் காலத்திற்குப் பின் வந்த இலக்கணப் புலவர் செயல் வகை.

வடமொழி முதலிய மொழிகளின் மரபும், தமிழ் மரபும் வேறு வேறு இயல்பின என உணர்ந்து ஆங்காங்கு அவ்வேற்றுமையை எடுத் துரைத்து மகிழ்விப்பதிலும் பரிமேலழகர் சிறப்புடையவர். தன் உயி ரைக் காக்க வேண்டிவருமிடத்து, ஒருவன் மானம் கருதல் ஆகாது என்பது வடநூல் மரபு. "இன்றியமையாச் சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல்" என்ற திருக்குறள், வடநூல் மரபுக்கு மாறுபட நிற்பது காண்கிருர் பரிமேலழகர், ஆதலால் "இறப்ப வருவழி, இளிவந்தன செய்தாயினும் உய்க என்ற வடநூல் முறைமையை மறுத்து, உடம்பி

னது நிலையின்மையையும், மானத்தினது நிலை உடைமையையும் தூக்கி, அவை செய்யற்க என்பதாம் என உரைக்கின்றார். இவ்வாறே,

> "ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை"

என்ற திருக்குறளில் தமிழ் மரபின் தனி இயல்பை விளக்குகின்றார்.

இனி அக்காலத்தில் ஏடும், எழுத்தாணியும் கொண்டு எழுதுவது மரபாகலின், திருக்குறள் உரையின்கண், சில இடங்களில் பரிமேலழகர் முன் எழுதியதை மறந்து தவறுதலும் செய்கின்றார்.

> "நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
> வாள துணர்வார்ப் பெறின்"

என்பது திருக்குறள். இதற்குத் தாம் ஒரு உரை வகுத்துக்கொண்டு, பிறர்கூறும் உரையை மறுத்து ஒதுக்குகின்றார் பரிமேலழகர். பிறர் கூறும்உரை, "நாள் என்பது ஒரு பொருள் போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாள்" என்பது. இதன்கண் "நாளென ஒன்று" என்பதற்கு "நாள் என்பது ஒன்று" எனப் பொருள் பிறரால் உரைக்கப்படுகிறது. அவ்விடத்து "என" என்ற சொல் "என்பது" எனப் பொருள் படுகிறது. "என" என்பது ஒரு இடைச் சொல்லேயன்றிப் பெயர்ச் சொல் அன்று என்பது பரிமேலழகர் கொள்கை. அது (என) "என்பது" எனப் பொருள்படல் கூடாது. ஒன்றுபோல் காட்டி என்பதற்கு "ஒரு பொருள் போலத் தோன்றி" என்று பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்வதில் பொருள் சிறப்பு இல்லை என்பது பரிமேலழகர் கொள்கை. 'வாளது" என்றவிடத்து "அது" என்பது குற்றியலுகரம் அன்று. ஆகவே பரிமேலழகர் கருத்துப்படி "அது உணர்வார்" எனப் புணராது முறைப்பட வரவேண்டுமாயின் "அஃதுணர்வார்ப் பெறின்" என வருதல் வேண்டும். அவ்வாறு இல்லாமையால் இதற்குப் பிறர் கூறுவது பொருந்தாது என்ற கருத்துப்பட "என" என்பது பெயரன்றி, இடைச்சொல் ஆகலானும், "ஒன்றுபோற் காட்டி என்பதற்கு ஒரு பொருட் சிறப்பின்மையாலும், "அது" என்பது குற்றியலுகரம் அன்மையாலும், அஃது உரையன்மை அறிக; என்று பரிமேலழகர் மறுக்கின்றார்.

இனிப் பரிமேலழகர் கருத்தை ஆராய்வோம். "என" என்னும் சொல்இடைச் சொல்லேயன்றிப் பெயர்ச்சொல் அன்று எனப் பரிமேலழகர் கருதுவது தொல்காப்பியத்திற்கு முரண் ஆனது என என்னும்

இடைச்சொல் பெயர்ப்பொருளிலும்வரும் என்ற கருத்துப்பட ''வினையே குறிப்பே இசையே பண்பே, எண்ணே பெயரோடு அவ்வாறு கிளவியும் கண்ணிய நிலைத்தே, என என் கிளவி'' (தொல். இடை. 10) என்று தொல்காப்பியம் கூறுகிறது. அடுத்து ''ஒன்று போல் காட்டி'' என்பதற்கு ஒரு பொருள் போலக்காட்டி என்றதில் பொருள் சிறப்பில்லை என்கிறார். ஆனால் அவர் இல்லை என்பதற்குத் தக்ககாரணம் கூறாமையால் அவர் உரை செல்லாதாகிறது மூன்றாவதாக ''வாளது'' என்பதிலுள்ள ''அது'' என்னும் சொல் குற்றியலுகரமன்று எனக்காட்டி மறுப்பது, அவர் பிறிதொரு இடத்தில் உரைத்த உரையையே மறுக்கிறது. அதாவது ''உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன், புண்ண துணர்வார்ப் பெறின்'' என்ற குறட்பாவின் உரையில் ''புண்ண துணர்வார்'' எனப்புணர்ந்ததற்கு, ''அஃது என்னல்வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது'' என உரைத்தார் பரிமேலழகர். அவரே ''நாளென ஒன்று போல் காட்டி'' என்ற திருக்குறள் உரையில் ''வாளது'' என்றவிடத்து, 'அஃது என்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது என்று தானே கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்வது உரை முறைமையன்று.

இனி ஓரிடத்தில் எழுவாய், பயனிலையே தெளிய நோக்காமல் தடுமாறுகின்றார் பரிமேலழகர்.

> வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
> மிச்சில் மிசைவான் புலம்''

என்ற திருக்குறட்கு ''மிசைவான்'' என்பது எழுவாயும் 'வேண்டுங் கொல்லோ'' என்பது பயனிலையும் ஆகும். அதனைத் தெளியாமல் ''இடல் வேண்டும்'' என்பதை எழுவாயும் பயனிலையுமாகக் கொண்டு ''மிசைவான் புலம் வித்தில்லாமலே விளையும்'' எனப் பொய்யுரை புகலுகின்றார். இக்குறட்பாவை உண்மை நெறியில் நின்று நோக்குவோமாயின் விருந்தோம்பி மிச்சில் மிசைபவன் (தன்பால்) உள்ளது வித்தே ஆயினும் விருந்திற்கு இடுவனே தவிர, புலத்திற்கு இடவிரும்பான் என்பது நேரிய பொருளாம்.

இங்ஙனம் ஒரு சில தவறுகள் ஆங்காங்குக் காணப்படினும் பழமையிற் புதுமையும், தருக்கத்தில் இலக்கணமும், விளக்கத்திற் சுருக்கமும், நூல் வழக்கொடு உலகியலும் புகுத்திய நுண்மையும், மாண்பும் அழகும் தெளிவும் பரிமேலழகர் உரைக் கென்றமைந்த சிறப்புக்கள் என்பது யாவரும் நினைவிற் கொள்ளத் தக்கது.*

---

* இதன் சுருக்கம் திருச்சி அகில இந்திய வானொலியில் 18-11-70-இல் ஒலிபரப்பப்பட்டது.

# "மார்" ஈற்று வினைச்சொற்கள்

**டாக்டர் மோ. இசரயேல்,** எம். ஏ., பிஎச். டி.,

**மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.**

## இலக்கண நூல்கள் தரும் செய்தி

'மார்' விகுதி பெற்ற பல வினைச்சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. தொல்காப்பியம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் அவற்றின் இலக்கணம் கூறப்படுகின்றது. இந்நூற்களில் 'மார்' வினைமுற்றுக்கள் விகுதிகள் வரிசையில்தான் தொகுக்கப்பட்டுள் ளன. எனவே இலக்கண நூலார் 'மார்' விகுதிபெற்ற வினைச்சொற்களை எல்லாம் வினைமுற்றுக்கள் என்றே கருதினர் என்பது உரையாசிரியர், பிற்கால இலக்கண அறிஞர் பலர் முடிவு. ஆனால் தொல்காப்பியனார் 'செய்கு' என்னும் வாய்பாட்டு வினையைப்பற்றி,

> "அவற்றுள்
>
> செய்கென் கிளவி வினையொடு முடியினும்
>
> அவ்வியல் திரியா தென்மனார் புலவர்" (தொ. சொ. 204)

என்று குறிப்பிட்டு அது வினைமுற்றின் இயல்பினின்று வேறுபடாது என்று வெளிப்படையாகக் கூறி உள்ளார். இஃது இவ்வாறிருக்க, அவர் 'மார்' விகுதிபெற்ற வினைகளைப் 'பல்லோர் படர்க்கை' என்றும் 'காலக் கிளவியொடு முடியும்' (தொ. சொ 207) என்றும் கூறியுள்ளாரேயன்றி அவை வினைமுற்றின் இயல்பினின்று வேறுபடா என்று வெளிப்படை யாகக் கூறவில்லை. நன்னூலாரும் இதே வகையில் 'மார்' விகுதி பெற்ற வினைகள் 'பல்லோர் படர்க்கை,' 'வினையொடு முடியும் (நன்.327) என்று மட்டும் குறிப்பிட்டு நின்று விடுகின்றார். இவை பல்லோர் படர்க்கை எனக் குறிப்பிடப்படுவதாலும், வினைமுற்று விகுதிகளை வகுத்துத் தொகுத்துச் சொல்லும் போது 'மார்' விகுதி கூறப்படுவதாலும் மாரீற் றுச் சொற்கள் என்றே இலக்கண நூலார் கருதுகின்றனர் என்பது தெளிவு.

## சங்க இலக்கியங்களில் 'மார்' விகுதி பெற்ற சொற்கள்

சங்க இலக்கியங்களைப் பார்வையிடுங்கால் ஏறத்தாழ எண்பத்தேழு சொற்கள் 'மார்' விகுதியுடன் அமைகின்றன. அவற்றில் ஏழு சொற்கள் பெயர்களேயாகும்.

எ-டு. ஆய்மார் (புறம் 342)
தன்னைமார் (புறம் 342-15)
தோழிமார் (அகம் 48-5)

இவை போன்ற சில சொற்களில் 'மார்' பெயர்ச்சொல் விகுதியாக அமைந்தும் இலக்கண ஆசிரியர்கள் இதனைப் பெயர்ச்சொல் விகுதியாகக் குறிப்பிடவில்லை.

உண்மையை ஆயின், ஒருசில சொற்கள்மட்டுமே 'மார்' விகுதியுடன் அமைந்து வினைமுற்றுக்களாக வழங்குகின்றன. அவற்றிலும் மிகுதியானவை எதிர்மறை வினைமுற்றுக்களாக அமைதல் அறிதற்பான்மையது.

எ-டு. 1. காமம் படரட வருந்திய
நோய்மலி வருத்தல் காணன்மா ரெமரே (நற்.64. 13,14,)

2. ஐதகலல்குன் மகளிர்
நெய்தல்கேளன்மார் நெடுங்கடை யோனே
(புறம் 389-15,16)

3. பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே (புறம் 375-20,21)

4. உலகத்து நிலவன் மாரோ புரவலர் (புறம் 375-18)

5. செல்வர் அல்லர் நங்காதலர் செலினும்
நோன்மார் அல்லர் நோயே......... (நற். 208-5, 6)

மாரீற்றுச் சொற்கள் ஓரோவிடங்களில் மிக அருகி வினையாலணையும் பெயர்களாகவும் வழங்குதலைக் காணலாம்.

எ-டு. 1. அஞ்சுவரு நெறியிடைத் தமியர் சென்மார்
நெஞ்சுண மொழிப மன்னே தோழி (அகம் 157-9, 10)

2 நீதக்காய் தைந்நீர் நிறந்தெளிந்தா யென்மாரும்
(பரி, 11-115)

3. வேர்பிணி பன்மலர் வேயு மோரும் (பரி. 12, 16)

சங்க இலக்கியங்களில் காணப்படும் எஞ்சிய மிகுதியான சொற்களும் வினையெச்சங்களாகவே வழங்குகின்றன. அவ்வாறு வினையெச்சங்களாக வழங்குகின்றவற்றில் ஒரு சில தாம் தழுவும் வினைமுற்றுக்களோடு இயைபு (Concord) பெற்றும் சில இயைபுபெறாமலும் அமைந்துள்ளமையைக் காணலாம்.

## இயைபுபெற்றவை

1. அரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைநனி மருத மேறித் தெறுமார் (பதிற். 27-5, 6)
2. குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர் (அகம். 207: 3,4)
3. கொடுங் குழாய் துறக்குந ரல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே (கலி.13 26 27)

இங்கு மாரீற்று வினையெச்சங்கள் தாம் தழுவும் வினைமுற்றுக்களோடன்றி, எழுவாய்ச் சொல்லோடும் திணை, பால், எண் ஆகியவற்றில் இயைபுபெற்றுள்ளமையைக் காணலாம்.

## இயைபற்றவை

1. மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்று முரைவா ராதே (குறு. 155-6, 7)
2. அவள்பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீங் கேகுமா ருளெனே
(குறு. 173-6, 7)

3. விளங்குபுகழ் நிறுத்த இடம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலிற் குறைவினை முடிமார்
(அகம் 375-11, 12)

இங்கு மாரீற்று வினையெச்சங்கள் தாம் தழுவும் வினைமுற்றுக்களோடும் எழுவாய்ச் சொற்களோடும் திணை, பால், எண் முதலியவற்றில் இயைபு பெறுமையைக் காணலாம்.

## மாரீற்று வினைகளின் வரலாறு

தொல்காப்பியனார்,

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப (தொ. சொ. 207)
ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே (தொ சொ. 7)

என்னும் நூற்பாக்களில் 'மார்' வினைமுற்று விகுதியாக அமையும் என்கின்றார். எனவே தொடக்கநிலையில் 'மார்' ஈற்று வினைகள் வினைமுற்றுக்களாக வழங்கி இருத்தல் வேண்டும். அவை பெரும்பாலும் பெயரோடு முடிவுபெற்றன. அதுவே மிகப் பழமையான நிலை எனலாம்.

எடு பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே (புறம் 375-20, 21)

தெய்வச்சிலையார், "மாரீற்று வினைச்சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது பெயரொடு முடிதலேயன்றி, வினையொடும் முடியும்" என்று கூறுவது மிகப் பொருத்தமாகத் தோன்றுகின்றது. மாரீற்றுச் சொற்கள் வினைமுற்றுக்களாக வழங்கும்போது மிகுதியும் பெயர்கொண்டே முடிவுற்றன என்பது தெளிவு. காலப் போக்கில் மாரீற்று வினைகள் மிகுதியாக வினையெச்சங்களாக வழங்கவே அந்த வளர்ச்சியையும் உட்படுத்தவே தொல்காப்பியனார் "காலக்கிளவியொடு முடியும் என்ப" என்று குறிப்பிடுகின்றார். இத்தொடருக்கு ஏனைய உரையாசிரியர்கள் எல்லாரும் பிற முற்றுச் சொற்போற் பெயரொடு முடியாது, காலத்தை உணர்த்தும் சொல்லாகிய வினைச்சொல்லோடு முடியும்" என்று உரை கூறத் தெய்வச்சிலையார் மாறுபட்டுக் கூறுகின்றாராயின் அவர் "காலக்கிளவியொடும் முடியும்" என்று இடையில் "உம்" இடைச்சொல் அமையப் பொருள் கொண்டு இருத்தல் வேண்டும். நூற்பாவின் சொற்களமைப்பில் 'உம்" அமையினும் அமையாவிடினும் புணர்ச்சியில் வேறுபாடின்று. ஆனால் பொருளில் வேறுபாடு உள்ளது. எனவே ஏனைய உரையாசிரியர்கள் எல்லாம் "உம்" இடைச்சொல்லைக் காணாதிருக்க, தெய்வச்சிலையார் மட்டும் அதனைக் கண்டு வழக்கிற்கேற்ப உரை வகுத்திருப்பது பாராட்டற்குரியதும் பொருத்தமானதுமாகும்.

தமிழில் வினைமுற்றுக்கள் வினையெச்சமாகச் செயலாற்றுதல் உண்டு. தொல்காப்பியனார் "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" (தொ. சொ. 457) என்று குறிப்பிடுவதற்கு 'வினையெச்சங்கள் வேறுபட்ட பல இலக்கணத்தையுடைய' என்று உரையாசிரியர்கள் விளக்கம் கூறி, வினைமுற்று வினையெச்சமாகச் செயலாற்றுவதையும் எடுத்துக் காட்டுகின்றனர். தொல்காப்பியனார் வினையெச்ச வாய்பாடுகளை வினையியலில் தொகுத்துக் கூறிப் (தொ. சொ. 228) பின்னர் எச்சவியலில் வேறு அமைப்பில் நின்று வினையெச்சமாக வழங்குவனவற்றைக் கொள்ளவே இவ்வாறு கூறுகின்றார் எனலாம். நன்னூலார் இதனையே,

வினைமுற்றே வினையெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலும் உளவே (நன். 351)

வெளிப்படையாகத் தெளிவுபடக் கூறுவது இவண் நோக்கத் தக்கது எனவே வினைமுற்று வினையெச்சமாகச் செயலாற்றுதல் இலக்கண

நூலார்க்கு உடன்பாடேயாகும். இதனையே பிற்கால உரையாசிரியர் "முற்றெச்சம்" என்றனர்.

எ-டு. "ஒருங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர்"
(கலி. 65 : 23, 24)

வினை முற்றுக்கள் பெயர்களாகச் செயலாற்றுதலும் உண்டு. பெயராகச் செயலாற்றும் வினைமுற்றினைத் தொல்காப்பியனார் வினைப் பெயர், தொழிற்பெயர் (தொ சொ. 139, 165, 168) என்னும் பெயர் களால் குறிப்பிடுவர். நன்னூலார் வினையாலணையும் பெயர் (நன். 286) என்பார்.

எ-டு. 'வேர்பிணி பன்மலர் வேயு மோரும்" (பரி-12,16)

எனவே தொடக்க நிலையில் மாரீற்று வினைகள் வினைமுற்றுக்களா கவே வழங்கி இருத்தல் வேண்டும் அவை உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருநிலைகளிலும் அமைந்திருக்கலாம். அவை வினைகளையே தழுவும் சொற்களாக நின்று முற்றெச்சங்களாகவும் எழுவாய்களாக நின்று வினையாலணையும் பெயர்களாகவும்கூட ஓரளவு வழக்கில் தொன்றுதொட்டே இடம்பெற்றிருக்கலாம் எனத்தெரிகிறது. காலப் போக்கில் அவற்றின் முற்றெச்ச வழக்கே மிகுதியும் செல்வாக்குப் பெறவே, அவை அடிப்படையில் வினைமுற்றுக்கள் என்ற நிலையினை மறுக்க உடன்படாத இலக்கண ஆசிரியர் அவற்றைக் காலக்கிளவி யொடு முடியும் வினைமுற்றுக்கள் எனக்கருதலாயினர். முதன் முதல் பல்லோர் படர்க்கைச் சொற்களுடன் இயைபு பெற்றே மாரீற்று முற்றெச்சங்கள் வழங்கி இருக்கலாம் பின்னர்ப் பிறபால் வினைகளுட னும் இயைபுபெறாமல் வழங்கலாயின எனலாம். காலப்போக்கில் மாரீற்று வினைகளின் முற்றெச்ச வழக்கு மிகுந்துவிடவே அவை வினை முற்றுக்களாக நிலைபெறாமற்போயின. ஒரு சில நிலைபெற்றவை கூட எதிர்மறை முனைமுற்றுக்களாகவே அமைகின்றன.

## மாரீற்று வினைச்சொல் பெயர்கொண்டு முடியுமா?

தெய்வச்சிலையார் தவிர ஏனைய எல்லா உரையாசிரியர்களும்மாரீற்று வினைமுற்று பிறமுற்றுச்சொற்போற் பெயரொடு முடியாது காலத்தை உணர்த்தும் சொல்லாகிய வினைச்சொல்லோடுமுடியும் என்று கூற, அவர் மட்டும் அது பெயரொடு முடிதலன்றி, வினையொடும் முடியும் என்று கூறுகின்றார்.

சேனுவரையர் "பாடன்மார், காணன்மார் எனவும் மாரீற்றுச் சொற்கள் பெயர்கொண்டு வந்தனவாலெனின் அவை பாடுவார், காண் பார்என்னும் ஆரீற்று முற்றுச் சொல்லின் எதிர்மறையாய் ஒரு மொழிப்புணர்ச்சியான் மகரம் பெற்று நின்றன. மாரீருயின் அவை பாடாதொழிவார், காணு தொழிவார் என ஏவற்பொருண்மை உணர்த்து மாறில்லையென்க" என்று விளக்கம் தருகின்ருர்.

நச்சினுர்க்கினியர் "நிலவன்மாரே புலவர் (புறம் 375-18), பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே (புறம் 375-21), நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே (நற். 65) என்பன நிலவுக, பாடுக, காண்க என்னும் வியங்கோட்கிளவிக்கு எதிர்மறை உணர்க" என்கின்ருர்.

கல்லாடனுர் "பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே என்று பெயர் கொண்டு முடிந்தனவால் எனின் அவை பாடுக, நிலவுக எனவரும் வியங்கோளிற்கு எதிர்மறை" என்கின்ருர்,

எனவே தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரும் பெயர்கொண்டு முடியும் கேளன்மார், பாடன்மார் போன்ற மாரீற்று வினைகளைக் கேண் மார், பாடுமார் ஆகிய வினைகளின் எதிர்மறைச்சொற்கள் என்ரு, அன்றேல் ஒழுங்கான படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுக்கள் என்ரு கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனல் உண்மை யில் அவை மாரீறு பெற்ற படர்க்கைப் பலர்பால் எதிர்மறை வினை முற்றுக்களேயாகும். அவை பெயரொடு முடிகின்றன. எனவே அவை மாரீற்று எதிர் மறை வினைமுற்றுக்கள் என்பதில் ஐயம் ஒன்றுமில்லை. அவைபயனிலைகளாகச் செயலாற்றுகின்றன மார் விகுதிபெற்ற உடன் பாட்டு வினைமுற்று ஒன்று பெயர் எழுவாய் ஏற்றுப் பயனிலையாக வழங் குகின்றமையும் சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கின்றது.

எ-டு. "காதலர் செலினும் நோன்மாரல்லர் நோயே" (நற். 208. 6)

எனவே மாரீற்று வினைச்சொற்கள் பெயர்கொண்டு முடிதல் உண்டு என்று கண்டோம். அதுவே அவற்றின் பழமையான நிலைஎனலாம்.

## 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் மாரீற்று வினையும்

'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று படர்க்கைப் பலர் பாலில்வராது என்றும் (தொ. சொ. 227), நிகழ்காலத்தில்தான் வழங் கும்என்றும் (தொ.சொ.173,227) தொல்காப்பியனுர் கூறுகின்ருர். செய் யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றில் திணை, பால், எண் காட்டும்

விகுதி இல்லை. தொடக்க நிலையில் 'செய்யும், என்னும் வாய்பாட்டில் அமைந்து வழங்கிய வினைமுற்றுக்கள் சில காலப்போக்கில் திணை-பால், எண் காட்டும் விகுதிகளை ஏற்று வழங்கத் தலைப்பட்டிருக்கலாம் அவ்வாறு விகுதியை ஏற்று வழங்கும் வடிவங்களில் 'மார்' ஈறு பெற்ற வினைச்சொல்லும் ஒன்று எனக் கொள்ளுதல் பொருந்தும். இது படர்க்கைப் பலர்பால் விகுதியை ஏற்கவே 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் பலர்பாலில் வழங்காது என்னும் தடையையும் நீக்கி விட்டது எனலாம். இவ்வாறு 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றே திணை பால், எண் விகுதி பெற்று வழங்குதல் பல வினைச்சொற்களிலும் காணப்படுகின்றன.

எ-டு. கொய்யுமோன் (புறம் 225) கொய்யும்-ஓ-ன்
அறியுமோன் (புறம் 137) அறியும்-ஓ-ன்
என்மார் (பரி. 11-115) என்ம்-ஆ-ர்
நோன்மார் (நற். 208 6) நோன்ம்-ஆ-ர்
என்னுமோர் (குறள் 653) என்னும்-ஓ-ர்
வேயுமோர் (பரி. 12, 16) வேயும்-ஓ-ர்
உண்மர் (பதி. 24, 19) உண்ம்-அ-ர்
என்மர் (பரி. 12, 49) என்ம்-அ-ர்
என்மனர் (கலி. 119,16) என்ம்-அன்-ஆ-ர்
காணன்மார் (நற் 64) காண்-அல்-ம்-ஆ-ர் (காணன்ம்)
கறக்குந்து (புறம் 352) கறக்கும்-து.
பூப்பறிக்குந்து (புறம் 352) பூப்பறிக்கும்-து.
இசைக்குமன (தொ. சொ. 1) இசைக்கும்-அன்-அ.
செய்ம்மன (தொ. சொ. 222) செய்ம்-அன்-அ

எனவே 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றினின்று ஆண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின்பால் வினைச்சொற்கள் அவற்றிற்குரிய திணை-பால், எண் காட்டும் விகுதிகள் இணைந்து அமைந்துள்ளன என்று அறிதும். இது காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியேயாகும்.

### என்மர், என்மார், என்மனர்

இம் மூன்று சொற்களின் அடிப்படையும், வளர்ச்சியும் மேற் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களின் பட்டியல் வாயிலாகச் சிறந்த விளக்கம் பெறுகின்றன. தொல்காப்பியனார் அர், ஆர் என்பன படர்க்கைப் பலர்பால் விகுதிகள் என்று கூறுகின்றார் எனவே என்மர், என்மார் என்னும் சொற்களில் 'என்ம்' என்னும் 'செய்யும்' வாய்பாட்டு

வடிவுடன் முறையே அர், ஆர் விகுதிகள் இணைந்து உள்ளன எனலாம் என்மனார் என்ற சொல்லையும் அவ்வாறே பகுத்துக்காணுங்கால் (என்ம்-அன்-ஆர்) ஆர் விகுதியும் அதற்கு முன்னர் அன் சாரியையும் அமைந்திருத்தலைக் காணலாம். இதற்குமாறாக உரையாசிரியர்கள் இதன் அமைப்புப்பற்றிப் பல்வேறுபட்ட விளக்கம்தந்து இடர்ப்படுகின்றனர்.

இளம்பூரணர் கல்லாடனார் ஆகியோர் "என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச்சொல்லைக் குறைக்கும்வழிக்குறைத்தல் என்பதனால் பகரம் குறைத்து விரிக்கும் வழி விரித்தல் என்பதனால் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச் சொற்பெய்து விரித்தான்" எனக் கூறி உள்ளனர். சேனாவரையர் 'என்மனார் என்பது செய்யுண்முடிவு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச் சால்" என்றார். நச்சினார்க்கினியர் என் என்னும் பகுதியும் ஆர் என்னும் பால்காட்டும் விகுதியும் சேர்ந்து அமைந்த சொல் என்றும், நிகழ்காலம் காட்டுவதுஎன்றும் கூறுவர். தெய்வச்சிலையார் என்ப என்பது என்மனார் எனத்திரிந்தது என்றும், எதிர்காலத்தை உணர்த்துவதற்குரியது, இங்கு நிகழ்காலத்தை உணர்த்துகின்றது என்றும் கூறுவர்.

முன்னர்க்கொடுக்கப்பட்ட சொல் விளக்கம் இவ்வையப்பாடுகளையெல்லாம் அகற்றிச் சொல்லமைப்பில் தெளிவு உண்டாக்கும் என்பது உறுதி.

### காலக் குறியீடு

மாரீற்றுச் சொற்களின் காலம்யாது என ஆய்தல் பயன் தருவதாகும். அவை யாவும் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை என முன்னர்க் கண்டோம். 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று "நிகழூஉ நின்ற பலர் வரை கிளவி" (தொ. சொ. 173) "நிகழுங் காலத்துச் செய்யும் என்னுங் கிளவி" (தொ. சொ. 227) என்னும் தொடர்களில்நிகழுங் காலத்தையே குறிக்கும் என்று தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார். நன்னூலார் "செய்யுநிகழ் பெதிர்வும்" (நன். 145) குறிப்பிட்டு அவை நிகழ்வு எதிர்வு ஆகிய இருகாலங்களில் வழங்கும் என்கின்றார்.

முன்னர்க் கொடுக்கப்பட்ட சொற்களைப் பகுத்துக் காணுங்கால் உம்/ம் என்னும் வடிவம் அவற்றில் அமைந்து, அது காலங்காட்டி நிற்றலைக் காணலாம். இக்குறியீடு தொல்காப்பியனார் காலத்தில் நிகழ் காலத்தையே சுட்டிற்று என்பது தெளிவு. காலப்போக்கில் நிகழ்வு,

எதிர்வு ஆகிய இருகாலங்களையும், சங்க இலக்கியத்தில் பல இடங்களில் எதிர்காலத்தை மட்டும் குறித்தலாயிற்று.

இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடனார் ஆகிய தொல்காப்பிய உரையாசிரியர்கள் மாரீற்று வினைச் சொற்கள் எதிர்காலத்தில் வழங்கும் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகவே உள்ளது. உம்/ம் எதிர் காலக் குறியீடேயாகும்.

'செய்யும்' வாய்பாட்டு வினைமுற்றிலும் 'அதன் அடிப்படையில் தோன்றிய பிற திணை-பால், எண் காட்டும் வினைச் சொற்களிலும் உம்/ம் எதிர்காலக் குறியீடாக அமைந்து அதனை ஏற்று நிற்கும் சொற்கள் எதிர்காலச் சொற்களாகக் காணப்பட்டாலும் வழக்கில் பெரும்பாலும் நிகழ்காலப் பொருளையே தந்து நிற்றல் கருதியே தொல் காப்பியனார் அடிப்படை வடிவத்தை ''நிகழூங் காலத்துச் செய்யுமென் கிளவி'' (தொ. சொ. 227) என்று குறிப்பிட்டார் போலும்.

எ-டு. என்மனார் = என்று கூறுவர்.
செய்ம்மன = செய்பவை.
பாயுந்து = பாய்வது.
அறியுமோன் = அறியுமவன்.

முடிவுரை:

மாரீற்று வினைச் சொற்கள் பற்றி இலக்கண நூல்கள் தரும் செய்தி, அவற்றின் சங்க கால வழக்கு காலப்போக்கில் அவை வழங்கிய முறை, அவற்றின் வடிவத் தோற்றம், அமைப்புமுறை, அவை வழங்கும் காலம் ஆகியவை இக்கட்டுரையின்கண் விளக்கப்பட்டுள்ளன.

# வருணனும் குபேரனும்

**சி. சத்தியமூர்த்தி, M. A,**
ஆய்வாளர், தமிழ் ஆராய்ச்சித்துறை,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

தமிழர்கள் வழிபட்ட இரு கடவுளரைப் பற்றி இக்கட்டுரை பேசுகிறது. இத்துடன் சங்கவிலக்கியத்தில் கூறப்பட்டுச் சங்கவிலக்கியத்தின் வாயிலாகத் தெளிவுபெற முடியாதவற்றிற்குப் பிற்கால இலக்கியத்தின் வாயிலாகத் தெளிவு காணலாம் என்பதையும் இக்கட்டுரை வற்புறுத்துகிறது.

தொடக்க காலத்தில் இயற்கைத் தோற்றங்களைக் கடவுளராக உருவகித்து மனிதவினம் வணங்கத் தலைப்பட்டது. காலையில் நீலக் கடல் மேல் எழும் சிவந்த ஞாயிறு, நீல மயில்மேல் எழுந்தருளும் முருகப் பெருமானாக உருவெடுத்தது.

> "உலக முவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

என்ற திருமுருகாற்றுப்படை முதலிரு அடிகளும், அவற்றிற்குப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் வரைந்த உரையும் இதனைக் காட்டுகிறது. மாலையில் செவ்வானத்தில் பிறை தோன்றும் காட்சி, சிவந்த மேனியினையுடைய சிவபெருமானாகவும், அவனின் வளைந்த வெள்ளிய கூர் எயிறாகவும், உருவெடுத்தது. அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தில்,

> "செவ்வா னன்ன மேனி அவ்வான்
> இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று"

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடுகிறார். செவ்வானை மேனியாகவும், அவ்வானில் தோன்றும் பிறையை இறைவன் முடிமீது சூடும் ஒன்றாகவும் கூறும் வழக்கத்தினை அண்மைக்காலக்கவிமணி அவர்களும் பின்வருமாறு பாடுகிறார்.

> "வான வெளிதனிலே — கவிந்தெழு
> மாலைப் பொழுதினிலே
> கூனப்பிறை வரவே — சிவன் திருக்
> கோலம் தெளிவேன் அடி"

---

* இது, திருச்சியில் நடந்த இரண்டாவது இந்தியத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு மாநாட்டுக்கு அனுப்பப்பட்ட கட்டுரை.

நீண்டுவிரிந்த நீலமேகத்தைத் திருமாலின் நிற்கின்ற கோலமாகவும் படுகின்ற கோலமாகவும் (பரி 13 : 7—13; சிலம்பு 11 : 41—51; 11 : 35—40) கண்டனர். இங்ஙில இறைவடிவங்களும் வழிபாடுகளும் சமுதாயப் பின்புலத்தில் உருவெடுத்தன என்று கூறும் தவத்திரு தனிநாயக அடிகளாரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது[1] நெய்தல் நிலத்தமிழரைப் பொறுத்த வரையில் ''வண்ணம் உடையவன்'' என்ற பொருளில் வருவன் என்று இறைவனை வழிபட்டனர்; கடலின் நிறம் அவனுக்கு அளிக்கப்பட்டது, கடலில் தீர்த்தமாடிக் கடல்படு பொருளாகிய சுருமீன் கொம்பை நாட்டி அவனை வழிபட்டனர்; உப்பிட்டு உணக்கிய மீனை[2] அவனுக்குப் படைத்தனர்; என்பதை அடிகளார் எடுத்துக்காட்டுகிறார்.

வருணனைப் பற்றிய இருக்கு வேதப் பாடற் பகுதி கி. மு 1200—1000க்கு இடையில் மேற்குப் பஞ்சாப்பில் இயற்றப்பட்டது[3] அதில் வருணனைப் பற்றி வரும் வருணனைச் சுருக்கம் வருமாறு:— ''வருணன் என்றால் எங்கும் பரவி யிருப்பவன் என்று பொருள். காற்று வருணனுடைய மூச்சு. ஒழுங்கு தவறியவர்களைப் பாசத்தால் கட்டித் தண்டித்துப் பிறகு மன்னித்துக் காப்பான். வருணன் நீர்நிலைகளுக்குத் தலைவன். ஆறுகளின் நீரெல்லாம் கடலில் விழுந்தும் வருணனால் கடல் நிரம்புவதில்லை''.[4] வேத காலத்தில் முதன்மையான தெய்வமாகக் காட்சியளித்த இவன், புராண காலத்தில் பன்னிரு ஆதித்தருள் ஒருவனாகவும் கடலுக்கும் மழைக்கும் தலைவனாகவும், மேற்குத் திசைக் காவலனாகவும் கருதப்பட்டான். திருமுருகாற்றுப் படையிலும் (160) பரிபாடலிலும் (8:7) வருணன் மேற்குத் திசையின் காவலனாகப் பாடப் படுகிறான். திருமுருகாற்றுப்படையும் (167) பரிபாடலும் (3:6) ஆதித்தர் பன்னிருவருள் ஒருவனாகவும் வருணனைப் பாடுகின்றன.

தொல்காப்பியத்தில் ''வருணன்மேய பெருமணல் உலகமும்'' (தொல்: பொருள்; 5) என்று வரும் அடி, வருணனை நெய்தல் நிலத் தெய்வமாகக் கூறுகிறது. ஆரியரின் இருக்கு வேதம் குறிப்பிடும் வருணன் வேறு; நெய்தல் நிலத் தமிழர் வழிபட்ட வருணன் வேறு. வருணன் ஆரியத் தெய்வம் ஆகாமைக்குச் சான்றுகள் உள்ளன. ஒரு நாட்டுப் பழங்குடி மக்கள், தம் நிலத் தெய்வமாகத் தமக்கே யுரிய (Indigenous) தெய்வத்தையே கைக்கொண்டிருப்பர். தமிழ் நிலத் தெழுந்த முருக வணக்கத்திற்கும் வட நாட்டுக் கார்த்திகேய வணக்கத் திற்கும் வழிபாட்டுக் கலப்பு (Amalgamation) ஏற்பட்டது போன்று வேத வருணனும், தமிழக வருணனும் கலந்து வழிபடப்பட்டிருக்

கலாம். தமிழர்களின் தொன்மையைக் குறிக்க இப்போது இருக்கும் முதல் இந்தியப் பழம்நூல் இருக்கு வேதம்தான் (கி மு. 1200). திராவிடச் சொற்கள் இருக்கு வேதத்தில் காணப்படுவது ஒன்றே, இருக்கு வேத மொழியில் தமிழும் தொன்மைக் காலத்தில் கலந்துவிட்டது[5] என்பதைக் காட்டிவிடுகிறது தமிழர் மொழி இருக்கு வேதத்தில் கலந்தது போலவே தமிழர் வழிபாடும் அங்கு இடம்பெற்றிருக்க வாய்ப்புண்டு. எனவே இருக்கு வேதம் பாடும் வருணன் ஆரியர் வருகைக்கு முன்பிருந்த இந்நாட்டுப் பழங்குடி மக்களின் வழிபடு தெய்வமாகலாம். வருணன், திராவிடரிடமிருந்து ஆரியர் கடன்பெற்ற கடவுள் என்று பிரி. சீனிவாச ஐயங்கார் கருதுகிறார்.[6] 'பொடி' என்ற பொருளைத் தரும் 'சூர்ணம்' என்ற சொல், சுண்ணம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து எழுந்ததாகும். அது போன்று 'வர்ணம்' என்ற சொல், நிறம் எனப் பொருள்படும் 'வண்ணம்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்ததாகும். எனவே வருணன் என்ற நெய்தற் கடவுட் பெயர் 'வண்ணத்தையுடையவன்' என்று பொருள்தரும் தூய தமிழ்ச் சொல்லாகும்.[7] "வண்ணன் மேய பெருமணல் உலகமும்" என்ற பாட வேறுபாடும் தொல்காப்பிய நூற்பாவுக்கு உண்டு என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது[8]

வருணன் என்ற பெயர் சங்க இலக்கியங்கள் எங்கும் இடம்பெறவில்லையெனினும் 'கடல் தெய்வம்' 'கடல்கெழு கடவுள்' என்ற பெயர்களால் அவன் அழைக்கப்படுகிறான்.[9] கடல் தெய்வத்தின் மீது ஆணையிடும் வழக்கம் காணப்படுகிறது[10] கடல் தெய்வத்துக்கு விழாவெடுத்த செய்தி கூறப்படுகிறது.[11] கடல் தெய்வத்தைப் பெண்பாலாகக் கூறும் குறிப்பும் இடம்பெறுகிறது[12]

பட்டினப்பாலையில் (78-93) வருணன் வழிபாடு ஓரளவு விரிவாகப் பாடப்படுகிறது. வெண்கூதாளத்தின் குளிர்ந்த பூக்களினாலாகிய மாலைகளைச் சூட்டிய பரதவர் தம்மகளிருடன் சினையுடைய சுறுமீனின் கொம்பை வெண்மணல் முற்றத்தையுடைய மனையிடத்தே நட்டனர். அதன்மேல் தாழை மலரை அணிந்தனர். அதன் முன்னர்ப் பனங்கள்ளைப்படைத்தனர். பின்னர் அப்பொருள்களான தாழை மலரைச் சூடியும் பனங்கள்ளைப் பருகியும் மகிழ்ந்தனர். இவ்வழிபாடு முழுமதி நாளில் நிகழ்ந்தது அன்று பரதவர் மீன்பிடிக்கச் செல்லாமல் ஓய்வு எடுத்துக்கொண்டு உண்டும் விளையாடியும் இன்புற்றிருந்தனர். அகநானூறு (201) முழுமதி நாளில் மகளிர் கடல் தெய்வத்துக்கு முத்துக்களுடன் வலம்புரிச் சங்கு சொரிந்து வழிபாடாற்றுவதைப் பாடுகிறது. அலை அடித்தலால் நிலமானது அழிந்து விடாமல் மணல் குவிப்பதும்,

வலைவளம் தப்பின் நுளையர் மகளிர் கிளையுடன் சுறவுக்கோடுநட்டு வழி படும்போது வெளிப்படுவதும் வருணன் செயல் என்கிறார் பேராசிரியர் நச்சினார்க்கினியர்.[13]

சுறவுக்கோட்டில் வருணனை எழுந்தருளப் பண்ணிவழிபடல் மரபு என்பதனைப் பட்டினப்பாலை காட்டுகிறது. அந்நூலுக்கும் தொல்காப்பி யத்திற்கும் உரைவரைந்த பேராசிரியர் நச்சினார்க்கினியரும் அதனைச் சுட்டுகிறார். ஆனால் சுறவுக்கோட்டிற்கும் வருணனுக்கும் என்ன தொடர்பு என்பது தெளிவாகச் சுட்டப்படவில்லை. ஏதோ கடலின் விளைவாகிய சுறவு இறந்தபின்பு அதன் கொம்பினைநட்டுவழிபட்டார்கள் என்றே சொல்லத் தோன்றும். சுறா நெய்தல் நிலக்கருப்பொருள். இதன் தசையை அறுத்து உணக்கிப் பரதவர் உண்பர் (நற். 45). சுறா மீனின் வலிமைக்கு ஆற்றாது வலைகிழிபட்ட செய்திபாடப்படுகிறது. (நற்: 207, 215). இதனை வலையாற் பிடிக்க இயலாமல் பரதவர் எறியுளி யைப் பயன்படுத்திக் குத்திக் கொல்வர் (குறு: 304, நற்: 388, அகம் 210). இது பரதவரைப் புண்படுத்தியபோது (குறு: 269) புண் ஆறும் அளவும் மீன் பிடிக்கச் செல்லாது அவர்கள் ஓய்வெடுத்துக்கொண்டனர். கடற் கரை அருகே ஓடும் தலைவனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளையும் சுறா காயப்படுத்தியது (அகம்: 190). இது கொல்லும் இயல்புடையது எனவே 'கோட்சுறா' (நற்: 207, 215) எனப்படும். வாள்போன்ற வாயுடையதாகையால் (நற்: 111, அகம்: 187) வாள் ஏந்திய மறவ ருக்கு (புறம்: 13) உவமிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர, வருணனுக் கும் சுறாவுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிச் சங்கவிலக்கியத்தில் தெளிவு காணமுடியவில்லை. பிற்காலத் தமிழ் இலக்கியமாகிய தக்கயாகப்பரணி சுறா வருணனின் ஊர்தி என்று தெளிவுபடுத்து கிறது[14]. எனவே பட்டினப்பாலை எழுந்த சங்க காலத்தில் சுறா வரு ணனின் ஊர்தியாகக் கருதப்பட்டமையால்தான், அதன் கொம்பு வரு ணன் இருப்பிடமாக நினைந்து வழிபடப்பட்டது என்பது புலனாகின் றது. ஏனைய கடவுளருக்கு விடை, மயில், யானை, கருடன் போன்ற வற்றை ஊர்திகளாகத் தந்து வணங்கிய நம்முன்னோர், வருணனுக்குச் சுறாவை ஊர்தியாகத் தந்து வணங்கினர். ஒட்டக்கூத்தர் காட்டிய ஒளி யில் பட்டினப்பாலைப் புதைபொருள் அகப்படுகிறது.

வருணனைப் போல் கிரேக்கர் பொசிடொன் (Poseidon) என்ற கடற் கடவுளை வணங்கினர். கையிற் சூலத்துடன் காட்சியளிக்கும் அவனும் டொல்பின் (Dolphin) என்ற மீனுடன் காணப்படுகிறான்.

அவன் ஏசியன் (Aegean) கடலடியில் மாளிகையில் வாழ்வதாக நம்பினர். கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவனின் பளிங்குச் சிலை இன்று கிடைத்துள்ளது.[15] உரோமரும் நெப்ரியூன் (Neptune) என்ற கடற் கடவுளை கையிற் சூலத்துடனும் டொல்பின் மீனுடனும் வணங்கினர். வடமொழி நூல்களில் வருணன் ஊர்தி முதலை எனப்படுகிறது. சிவபெருமானை வருணன் வழிபட்டதாகத் தேவாரம் (2: 79: 4: 7: 55: 6) கூறும். சுந்தரர் கைலை செல்லும்போது அருளிச் செய்த பதிகத்தை வருணன் வாங்கிச் சென்று திருவஞ்சைக்களத்தில் சேர்ப்பித்த செய்தியையும் அறிகிறோம் (தேவாரம் 7: 100: 10; பெரியபுராணம் 4279). வருணனுக்குச் சிலை தமிழ்நாட்டில் எந்தக் கோவிலிலும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பாலித் தீவில் அவனுக்கு ஒரு கோவில் உண்டு.[16]

இனிச் செல்வத்தின் தெய்வமாகக் கருதப்படும் குபேரனைக் காண்போம். திருமுருகாற்றுப்படையிலும் (160) பரிபாடலிலும் (8:7) இவன் வடதிசைக் காவலனாகக் கூறப்படுகிறான். பதினெண்கணங்களுள் (திருமுருகு: 168) ஒருவராகிய இயக்கருக்கு இவன் தலைவன். இவனை அக்கணங்களுள் இன்னொருவராய இராக்கதருக்குத் தலைவன் என்றும் கூறுவர். இவனுக்கு இயக்கர் வேந்தன் (Yaksha-Raja) இராக்கதர் தலைவன் (Rakshasendra) என்னும் பெயர்கள் உள்ளன. இதனால் இவன் ஆரியர் அல்லாதாரின் தெய்வம் என்பது பெறப்படுகிறது. குபேரன் என்றால் அருவருப்பான உடலையுடையவன் என்று பொருள். வேதங்களில் பிற்பட்டே இவன் குறிப்பிடப்படுகிறான். இவன் இராவணனுக்குச் சகோதர முறையுடையவன். இலங்கை இவன் அரசு. ஆனால் இராவணனால் அங்கிருந்து துரத்தப்பட்டு 'அளகை'யினை அடைந்து அரசாண்டான். இவனது 'புட்பகம்' என்ற வானூர்தியை இராவணன் பறித்துவிட்டான் (தேவாரம்: 4: 17: 11). இவன் தவமியற்றிச் சிவபெருமான் தோழன் (தேவாரம்; 2: 83: 5; 6: 69: 7) ஆனான். இவன் பின்வரும் ஒன்பது நிதிகளின் தலைவன்:— கச்சபநிதி, முகுந்தநிதி, நந்தநிதி, கற்பநிதி, மகரநிதி, நீலநிதி, சங்கநிதி, பதுமராகநிதி, பதுமநிதி என்பன அவை இத்தகைய நிதிகளுக்குரியவன் ஆதலால் 'நிதிக்கிழவன்' என இவனை அழைப்பர். எனினும் சங்கநிதி, பதுமநிதி இரண்டும் (தேவாரம் 6: 95: 10) உடையவன் என்பது பற்றி இவனைச் சிறப்பாக இருநிதிக்கிழவன் என்றே அழைப்பர். சங்கு வடிவுபோன்ற வெண்பொற் குவியலையும் செந்தாமரை வடிவுபோன்ற செம்பொற் குவியலையும் முறையே சங்கநிதி, பதுமநிதி என்பவை குறிக்கின்றன என்பர் (திவாகரம்). சிலர் அளவற்ற செல்வங்களின் எண்

ணிக்கைகளை (சங்கம், பதுமம்) அவை குறிக்கின்றன என்பர் இவன் வடமொழியிலக்கியங்களில் மூன்று காலுடையவனாகவும் பொன்னிற ஒற்றைக் கண்ணனாகவும், ஒரு கையில் சங்கநிதியும் இன்னொன்றில் பதுமநிதியும் உடையவனாகவும் கூறப்படுகிறான். தேவாரப் பாடல் பெற்ற கீழ்வேளூர்க்கோவிலில் குபேரனுக்குச் சிற்பமும் கோவிலும் உள்ளது.

சங்கவிலக்கியத்தில் குபேரனைப்பற்றிப் பல குறிப்புக்கள் அகப்படவில்லை யெனினும் அவனைப் பற்றிய குறிப்பு இல்லாமலில்லை செல்லூர்க் கோசிகன் கண்ணனார் பாடிய அகநானூறு 66-ஆம் பாடல் அவனைக் குறிப்பிடுகிறது. தலைவன், தலைவியிருக்க இன்னொருத்தியை இரண்டாந்தாரமாக மணஞ்செய்யும் பொருட்டுத் தன் வீடிருக்கும் தெருவிலேயே தேரிற்செல்கிறான். தேர்மணி ஒலி கேட்டதும் அவன் புதல்வன் அதனைக் காணத் தளர் நடையுடன் வீட்டிற்கு வெளியே ஓடிவருகிறான். புதல்வனைக் கண்ட தலைவன் பாகனிடம் தேரை நிறுத்தக்கூறி ஓடிச் சென்று குழந்தையின் சிவந்தவாய் மார்பிற்பட அதனை எடுத்து அணைக்கிறான். பின்பு அதனை வீட்டினுள்ளே போகுமாறு கூறுகிறான். குழந்தை அதற்கு இசையாது அழுது அவனை விடவில்லை. எனவே தலைவனும் குழந்தையுடன் வீட்டிற்குள் நுழைந்து விடுகிறான். அவன் மணஞ்செய்யப்போகவிருந்த வீட்டிலிருந்து முழவொலி அவனை அழைப்பதுபோலக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனாலும் அந்த இரண்டாந் தாரத் திருமணம், "செறுநரும் விழையும்" அச்செல்வச் சிறுவனின் அன்புகனிந்த முகத்தின் முன் தடைப்பட்டுப்போயிற்று. தலைவியும் அதற்கு மகிழ்ந்தாள்.

மணம்புரியச் சென்ற தன் செலவைத் தடுத்த புதல்வனைக் குபேரன் [17] என்று கண்டோர் கூறும் படியாகத் தன் கழுத்தில் அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு தலைவன் வீட்டில் புகுந்தான் என்று தலைவி கூறுகிறாள். முன்னர்க் குழந்தையைத் தூக்கி அதன் செவ்வாய் மார்பிற்படத் தழுவியவன், பின் அதனை இறக்கிவிட்டு வீட்டினுள் செல்லுமாறு வேண்ட அது இசையாதது கண்டு மீண்டும் தூக்கிக் கழுத்தில் வைத்துக்கொண்டு வீட்டிற்குள் செல்கிறான். அந்நிலையில் புதல்வன் குபேரனாகக் காட்சியளிக்கிறான். இங்கு ஏன் புதல்வனைக் குபேரனாகச் சங்கப் புலவர் பாடினார் என்பதற்கு ஏனைய சங்கப்பாடல்களிலிருந்து தெளிவு பெற வழியில்லை. ஒட்டக் கூத்தர் அதற்கும் உதவுகிறார். குபேரனின் ஊர்தியாக மனிதன் அமைகின்றான் என்கிறார்.[18] குழந்தையானது கழுத்தில் இருபுறமும் தந்தையின் மார்பில் இருகால்களையும் போட்டு அவன் பிடரியில் அமர்ந்திருக்கிறது. இக் காட்சி, நரன் என்னும் மனிதன்

மேல் ஏறிவரும் நிலையிலுள்ள குபேரன் காட்சியைக் கவிஞருக்குக் கண் முன்புகொண்டு வந்திருக்கிறது. தக்கயாகப்பரணியின் பாடலுரைக்கு அடிக்குறிப்பு எழுதிய உ. வே. சாமிநாதையர் அவர்கள் "நரவாகனன்[19] என்னும் பெயர்க்காரணம் இப்பொழுதுதான் விளங்கிற்று" என்று எழுதுகிறார். ஆனால் மேற்கண்ட அகநானூற்றுப்பாடலை அவர் எடுத்துக்காட்டவில்லை. இங்கும் தக்கயாகப்பரணி சங்க இலக்கியப்பாடலுக்குத் தெளிவு காட்டியதைக் கண்டோம்.

வழிபாடும் இலக்கியமும் மனிதசமுதாயத்தின் தொடர்கதைகள். அனைத்துக் காலங்களையும் ஊடுருவிச்செல்லும் ஓர் ஒருமைப்பாடு அவற்றைப் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

## சான்று விளக்கம்


1. Xavier S. Thani Nayagam, **Landscape and Poetry,** Asia publishing House, India 1966 pp. 58-64.

2. Ibid pp. 66–67. துளையர்தம் தலைவர் அதிபத்தநாயனார் நாள்தோறும் படும் மீன்களுள் தலையான ஒன்றைச் சிவபெருமானுக்கென நிவேதித்துக் கடலில் விட்டுவந்த வரலாறு இதனோடு ஒப்பு நோக்கத் தக்கது.

3. H. D. Griswold, **The Religion of Rigveda,** Oxford University Press 1923, p. 74

4. கலைக்களஞ்சியம்—தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை 1963, தொகுதி: 9, பக்: 154—155.

5. S. K. Chaterji, **The origin and devolopment of Bengali, P. 42** See also: Dr. V. I. Subramoniam's 'Dravidian Words in Sanskrit', Tamil culture, Vol. IX, No. 3, July-Sept 1961.

6. P. T. Srinivasa Iyengar, **The age of the Mantras,** pp. 123—24.

7. "வண்ணம்" என்ற சொல் திறத்தையும் (குறு: 110: 6; பெரும் பாண் 30) தொய்யில் எழுதும் நிறக் குழம்பையும் (பதிற்று; 50:17; சிலம்பு: 5: 13; 20: 15; 28: 59) குறிக்கும். "வருணம்" என்ற சொல்லும் (சிலம்பு 22:45) நிறத்தையே குறிக்கிறது "வண்ண

வண்ணத்த மலர்'' (குறிஞ்சி: 114) என்ற இடத்தில் முன்னது நிறமும் பின்னது சாதியும் குறிக்கின்றன. இன்று அமெரிக்காவில் நிறவேறுபாட்டின் அடிப்படையில் வெள்ளையர், கறுப்பர் எனச் சாதிவெறி காணப்படுகிறது வருணாச்சிரம தருமம் (புறம்: 183:8. சிலம்பு 6: 164) முன்னவர் நிற வேறுபாட்டை வைத்து எழுந்தது எனலாம். சிலம்பு அழற்படு காதையில் வருணப்பூதருக்கு நால்வகை நிறம் பாடப்படுகிறது. ஆரியர், திராவிடர்களை கறுத்த நிறமுடையவர்களாகப் பாடியதையும் கருத்திற்கொள்க.

8, S. Ilakkuvanar, **Tholkappiyam with critical studies,** Kural Neri Publishing House, Madurai 1963. P. 384.

9. கலி: 131: 1; நற்: 358: 6; அகம்: 110: 4; குறு: 164: 4; சிலம்பு: 7. (5); (51).

10. கலி. 131; நற்: 358

11. புறம்: 9: 10 பழையவுரை.

12. அகம்: 370: 12,

13. தொல்: பொருள்: 5 நச்சினார்க்கினியம்.

14. தக்கயாகப்பரணி (மூலமும் உரையும்) உ. வே. சா. பதிப்பு 1960
''சிகரக் குலக்கிரிகள் சிதரத்தகர்க்கும் எறிதிரையால் ஒரோர் மகரக் களிக்களிறு மறுகக்கடற்கு அரசன்—வரவாரவே'' (456).

''சலத்து அரசைக் கயிற்றின் இணைத் தடக்கைகளைத் தளைத்தே கலக்கல முத்து உகுப்ப அடக்கடற் சுறவைக் கடித்தே'' (491).

''இருள்கடல் கடைக் கனலில் இட்டு எடா
வருணன் வாகனங்களை மடக்கியே'' (499).

15. Encyclopaedia Britannica, 1967, Vol.,18, p.304.

16. Benjemin Walker, **Hindu World,** London George Allen & Unwin Ltd., 1968, Vol., II, P. 553.

17. அகநானூறு:— களிற்றியானைநிரை, ஸ்ரீவத்ச சக்ரவர்த்தி ராசகோபாலார்யன் பதிப்பு, சென்னை கம்பர் புத்தகாலயம், அட்சய வருடம் (1926), அகம் 66: 16—18 பழைய உரை;

''நிதிக்கிழவன்—அளகேசுவரன். தடுத்த மாநிதிக் கிழவனும் போலுமென்று கண்டார் சொல்லும்படி மகனொடு புகுந்தா னென்றுமாம். மகனேயன்றி இவ்வாறுஞ் சொல்ல நின்றமையால் எச்சவும்மை.''

18. ''மறவைத் தனித்திகிரி வனையொத்து இரட்டைநிதி வர ஆளிலே
பறவைக் கழுத்தில் வரும் அரிஒத்து இயக்கர்குலபதி போகவே''
(தக்கயாகப்பரணி: 462)

19. உலோகசாரங்க முனிவர் தோளில் திருவரங்கர் ஆணைப்படி எழுந்தருளப்பெற்று வந்ததால் திருப்பாணாழ்வாருக்கு 'முனிவாகனர்'' என்ற பெயரமைந்தது இதனோடு ஒப்புநோக்கத் தக்கது தலைச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த கடவுளருள் 'நிதியின் கிழவன்' என்று குபேரன் குறிப்பிடப்படுகிறான் (இறையனாரகப் பொருளுரை; சிலம்பு 8: 1—2 அடியார்க்குநல்லார் உரை) தொல்: மரபியல் 75, பேராசிரியம் கூறுவதற்கேற்பச் சிலவிடங்களில் இருநிதிக்கிழவன் என்ற குபேரன் பெயரை வணிகரோடு ஒப்பித்துக் கூறுவது மரபு (சிலம்பு 1:34; 13: 57; 16: 75). தெய்வத்தின் பெயரை மக்களுக்கு இட்டு வழங்கும் மரபு காணப்படுகிறது (பார்க்க: தலைப்பு— ''தெய்வத்தாற் பெயர் பெற்றவர்''— பக்: 1426-27 சங்க இலக்கியம். (இரண்டாம் பகுதி)—பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பு 1967; சிலம்பு-15: 37). குபேரனின் பெயராகிய அளகைக்கோன் என்பது இன்று இலங்கைத் தமிழ் மக்கள் பெயர்களுள் இடம்பெறுகிறது.

மதிப்புரை :

# வீர காவியம்

[ஆசிரியர்: 'கவியரசு' முடியரசன்; கிடைக்குமிடம்: வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராசவீதி, புதுக்கோட்டை; விலை: ரூ. 4/-]

'பாவிலுறும் சொல்லிலெலலாம் எழுத்திலெல்லாம் பாட்டுவெறி' யூட்டப்பெற்று உணர்வுகளென்னும் இழையால் செய்யப்பெற்றுத் திகழும் வண்ணங்கொண்ட காப்பிய ஆடையாம் ''வீரகாவியம்'' தமிழின் இக்கால இலக்கிய முத்துக்களிடையே ஒளி வீசும் மணியாகத் திகழ்கின்றது. பரணிக்குப் பிறகு, 'பாண்டியன் பரிசு'க்குப் பிறகு, வீரத்தை அடித்தளமாகக் கொண்டு காப்பியத்தை இயற்றினர் என்பதில் கவியரசு 'முடியரசன்' பாராட்டைப் பெறுகின்றார்.

ஆங்கிலத்தில் மாத்யூ ஆர்னால்டு இயற்றியுள்ள 'சொராப் அண்டு ரசுடம்' (Sohrab and Rustum) என்ற கவிதையை மூலக் கதையாகக் கொண்டு 'வீரகாவியம்' தமிழின் புறம் தந்த வீரத்தைக் காட்டும் வகையில் எண்சீர் விருத்தப் பாக்களால் அழகிய நூலாகத் தொடுக்கப்பெற்றுள்ளது. ஐந்து படலங்களாகப் பகுக்கப்பெற்று நூற்றுப்பதினெட்டு இயல்களைக் கொண்டிலங்கும் காப்பியம் ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் முன்னுரையாக இரு பாடல் வரிகளைக் கொண்டு அமைந்திருப்பது புதுமைக்குரிய பயனுள்ள பகுதியாகும்

நாவலத்துப் பகைவர்களிடமிருந்து மூவக நாட்டைப பாதுகாத்து வளர்க்கும் ஒரே வீரச் செம்மல் மாவேழன் தனக்கு வீரஞ்செறிந்த கோளரி (முறுவலன்) என்னும் மகன் உண்டு என்று தெரிந்துகொள்வதற்கு முன்னாலேயே 'வேல்விழி'யாம் மனைவியைப் பிரிந்து போருக்கு வந்து, அக்களத்தையே தன் இருப்பிடமாகக் கொள்கின்றான். தன் மகனே, தன்னால் கொல்லப்பட்டு இறந்தான் எனத் தெரிந்து அவலத்தின் உச்சியில் நின்று உள்ளம் குமுறித் தானும் மாள்கின்ற காட்சி, கண்ணில் நீரைப் பொழியச் செய்கின்றது.

''நிறைந்துவரும் மறக்குலத்து மைந்தர் தாமும்
நெஞ்சுருகி உளைந்துமிக அரற்றி னின்றார்;
இரைந்தழுது புரண்டாலும் விளைவ தென்ன?
இளமைந்தன் எழுந்துவரப் போவ தில்லை;''

என்றமைத்து மாபெரும் மறக்குல வீரர்கள் இருவரின் அவல முடிவை மிகச்சிறந்த முறையில் வடித்துத் தருகின்றார்

காட்சிப் படலம், திருமணப் படலம், மகப்பேறு படலம் என்பன இவை பண்டைத் தமிழரின் அகத்துறை வாழ்க்கையினை நினைவுறுத்து கின்றன. தோழியின் நகைச்சுவை கலந்த நாவன்மை ஆசிரியரின் அறி வுக் கூர்மையை வெளிப்படுத்துகின்றது. தலைவியிடம் திருமணத்தை 'உடன்படுமெய்' என்று குறிக்கும் தோழி,

'குலக்கொழுந்தே! உயிரிரண்டு கூடுங் காலை
கூட்டுவிக்கும் உடன்படுமெய் போல உங்கள்
இலக்குடைய உயிரிரண்டைக் கூட்டு விக்கும்
எழில் மணத்தை அப்பெயராற் குறித்தேன்' என்றாள்,

எனக் கூறும்போது தமிழ்ச் சுவை மணக்கிறது.

அழகிய உவமைகள், ஆற்றொழுக்கு போன்று செல்லும் இனிய நடை, வீரத்தை உணர்த்திவரும் சூளுரைகள், நாடகப் போக்கிலே ஒன்றுக்குப் பின் ஒன்றாகக் கோர்வையாக அமையும் இலக்கியக் காட் சிகள் என இவை 'வீரகாவியத்தை' உண்மையிலேயே புகழ்க் காப்பிய மாக்குகின்றது.

—கு. இரா. சக்திதேவி, எம். ஏ.

## தியாக வேள்வி

[ நூல்: தியாகவேள்வி; ஆசிரியர்: முருகவடியான்; விலை: ரூ. 2/-; பக் கங்கள்: 240 ]

'தியாகவேள்வி' என்னும் இந்நூல் தற்காலப் புதின வகையைச் சேர்ந்தது. வேலம்பட்டி என்னும் சிறு கிராமத்தில் கதை துவங்கு கிறது சிவபாதம்தான் கதைத் தலைவன். நல்லதொரு ஆத்திகக் குடும் பத்தில் பிறந்து நல்லொழுக்கமும் நற்சிந்தையும் கொண்டு வளர்ந்து, வாழ்வின் பல்வேறு இன்னலகளுக்கும், துன்பங்களுக்கும் உட்பட்டுப் படிப்படியாய் உழைத்து முன்னேறுகிறான். அவனை நோக்கி டாக்டர் பட்டம் வந்துசேருகிறது. சீமைக்குச் சென்று திரும்புகின்றான். நிர்மலா அவனது அன்புக்கு உரியவளாகிறாள். அவர்களது அன்பினைச் சீதையும் இராமனும், ஆண்டாளும் திருமாலும் கொண்ட காதலோடு ஆசிரியர் இணைத்துச் செல்கிறார். ஆனால் இடையில் சந்திரன், லலிதம், முருகதாசர், சிவபாதத்தின் பெரியப்பா ஆகியவர்கள் வருகிறார்கள். ஆற்றின் இயல்பான போக்கை அணை தடுப்பதைப் போல அவர்களால் அவன் வாழ்வும் சிக்கலுக்கு ஆளாகிறது. சிவபாதம் நிர்மலாவைக் காதலிக்கவும், லலிதம் சிவபாதத்தைக் காதலிக்கவும் நேருகிறது. நிர்மலா சிவபாதத்தை விட்டுக் கெட்டலைந்த போதிலும் அவள் அவன் மனைவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இறக்கிறாள். அதனால் லலிதமே அவனது அன்புக்குகந்த மனைவியாக வந்து சேருகிறாள். கதை குறள், கீதை போன்ற உயர்ந்த நூல்களின் கருத்துக்களோடு சிவபாதம் செய் யும் தியாகத்தையும், லலிதம் செய்யும் தியாகத்தையும் விளக்கித் தியாக வேள்வியாகவே இனிது முடிகிறது.

கவிஞர் மு. உலகநாதன்.

**சங்கச் செய்திகள் :**

## கலைமகள் வழிபாடு

வழக்கம்போல் இவ்வாண்டும் நம் சங்கத்தில், 9—10—1970 அன்று, கலைமகள் வழிபாடு, சங்கத் தலைவர் தமிழவேள் திரு பி. டி. இராசன் அவர்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்வழிபாட்டினை முன்னிட்டுக் கல்லூரி மாணவியர்க்கென வைக்கப்பெற்ற கோலப் போட்டியில், புகுமுக வகுப்பு மாணவியர்க்கு முதற் பரிசாகக் குத்து விளக்கு வழங்கப்பெற்றது

## சங்கக் கல்லூரி

இக்கல்லூரியில் 11—12—70இல், கல்லூரி மாணவி ஒருவர்க்கும் ஆசிரியைக்கும் நடந்த தகராறு ஒன்றினைப் பெரிதுபடுத்தி மாணவியர் அனைவரும் வகுப்புகட்குச் செல்ல மறுத்துவிட்டனர். வேறுவழியின்றி அன்று முதல் கல்லூரி மூடப்பட்டுவிட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

## சங்கம் நடத்தும், பள்ளியிறுதி வகுப்பு, பயிற்சிப்பள்ளி, கல்லூரிகட்குரிய தமிழ்த் தேர்வுகள் விவரம்:

| வகுப்புகள் | தேர்வு நாள் | நேரம் |
|---|---|---|
| 1. உயர்பள்ளி இறுதி வகுப்பு (Standard XI) | 30—1—71 | காலை 10—12½<br>மாலை 2— 4½ |
| 2. பயிற்சிப் பள்ளி (Training School) | 30—1—71 | காலை 10—12½ |

## தேர்வுக் கட்டணங்கள்

| | ரூ. பை. |
|---|---|
| 1. பள்ளியிறுதி வகுப்பு: | |
| பொதுத் தமிழ் (Academic Course) | 1—75 |
| தொழிற் பிரிவு (Diversified Course) | 1—00 |
| 2. பயிற்சிப் பள்ளி | 1—25 |

## கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதி நாள்

## 20-1-1971

சிசி

# சில கல்லூரிகள் தெரிவித்த விருப்பத்திற்கிணங்க இறுதியாகத் திருத்தப்பட்ட கால அட்டவணை

| வகுப்புகள் | தேர்வு நாள் | நேரம் |
|---|---|---|
| 1. கல்லூரி முதனிலை வகுப்பு<br>P. U. C. I Paper<br>கலை வகுப்பு இரண்டாமாண்டு<br>(B. A., B. Sc., II year II Paper) | 6—2—1971 | காலை 10—1 |
| 2. கல்லூரி முதனிலை வகுப்பு<br>(P. U. C.) II Paper<br>கலை வகுப்பு இரண்டாமாண்டு<br>(B. A., B. Sc. II year III Paper) | 6—2—1971 | மாலை 2—5 |
| 3. முதனிலை சிறப்பு (P. U. C. Adv.)<br>கலை வகுப்பு முதலாண்டு<br>B. A., B.Sc., Ist year | 8—2—1971 | காலை 10—1 |

## தேர்வுக் கட்டணங்கள்

| | | ரூ. பை |
|---|---|---|
| 1. | கல்லூரி—முதனிலை (P. U. C.) இரண்டாம் பிரிவு | 2—00 |
| 2. | சிறப்புத் தமிழ் (Adv.) | 1—25 |
| 3. | (முதலாண்டு) பட்ட வகுப்பு (B. A., B.Sc.) | 1—25 |
| 4. | (இரண்டாமாண்டு) பட்ட வகுப்பு (B.A., B.Sc.) | 2—50 |

கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதி நாள்: 20—1—1971

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

மேலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கத் தெரு,
மதுரை-1.

23—12—70.

கி. பழநியப்பன்,
செயலர்.